KALAIKESARI
கலைக்கேசரி
CULTURE · HERITAGE · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT
www.kalaikesari.com October 2011

தமிழர் வாழ்வியல்



# யாழ்ப்பாண வாழ்வியல்

## பொருட்காட்சியும் கருத்தரங்கும்

## சிறப்பு மலர் - 2011

# கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கும் ஆய்வாளர்கள்

01. கலாநிதி. கே. சிவசண்முகராஜா
02. ந. சிவகரன்
03. திருமதி. சுகன்யா அரவிந்தன்
04. கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன்
05. வைத்தியகலாநிதி. அன்புச் செல்வி ஸ்ரீதரன்
06. வைத்தியகலாநிதி விவியன் சத்தியசீலன்
07. திருமதி.சுகந்தினி சிறிமுரளிதரன்
08. வைத்திய கலாநிதி திலகேஸ்வரி குமுதரஞ்சன்
12. திருமதி சிவராணி சிறி சற்குணராசா
13. கலாநிதி கந்தையா அருந்தவராஜா
14. கலாநிதி.செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
15. கலாநிதி.வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம்
16. கலாநிதி.திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்
17. பேராசிரியர்.திருமதி இராமநாதன்
18. கலாநிதி.த.கலாமணி
19. பேராசிரியர்.நா.ஞானக்குமரன்
20. ஆறுதிருமுருகன்
21. முனைவர் .சு.இராஜகோபால், தமிழ்நாடு.
22. கலாநிதி.(திருமதி) .இ.கயிலைநாதன்
23. திரு. வி. ஜி. தங்கவேல்
24. திரு. ஏ. கே. கருணாகரன்
25. கலாநிதி வ. மகேஸ்வரன்
26. செல்வி. தங்கேஸ்வரி
27. திருமதி விக்னேஸ்வரி பவநேசன்
28. திரு. ஞானமுத்து தில்லைநாதன்
29. இ. இராஜேஸ்கண்ணா
30. எஸ். எஸ். உதயகுமார்
31. கு. குருபரன்
32. சி. நிலாஜினி
33. வீ. சிவரூபி
34. K. T. கணேசலிங்கம்
35. சாந்தினி அருளானந்தம்
36. Mrs. S. Ravindran
37. Mrs. Sriranjini
38. V. Suntharesan
39. T. Karunakaran
40. Mr. Prashantha B. Madawala
41. H. G. Dayasisira
42. DR. N. Athiyaman
43. A. M. P. Senanayake
44. R. M. M. Chandraatne
45. Dr. V. Selvakumar
46. Anura Manatunga
47. Dr. Jeyaratne
48. Dr. V. Selvakumar
49. Dr.Nimal Perera



# Message from Director General
## Department of Archaeology

I am extremely happy to know that the Archaeology and History Department of the University of Jaffna is going to hold an Archaeology Exhibition and Seminars for four days. Jaffna Peninsula is one of the historically significant places. It is called as "Nagadipa" and "Naganadu" in Pali and Tamil respectively. Unfortunately, extensive Archaeological research has not been done in this part or, in the recent past, due to obvious reasons. Now, the situation is favorable for research activities. A regional government Archaeology Department has been established in Jaffna and active research is going on with the help of Archaeology graduates. Jaffna has 3000 year old history behind it. Because of its strategic situation, Jaffna has had cultural and commercial ties with many countries, especially the ties and influence with South Indian ancient Hindu temples, Mosques and Churches. Adequate researches have not been done about the Hindu temples. I strongly believe that the Archaeology Department would make more research and bring out more facts about the Hindu temples.

Historical monuments are national treasures which reflect our noble past. They must identified and preserved for our future generations. I hope that the exhibition and seminars would serve the purpose. I congratulate the Archaeology Department and its Head, Prof.P.Pushparatnam on this venture, and I urge all to co-operate with him.

I sincerely wish the exhibition and seminars all success.

**Senarath Dissanayake**
Directore General
Department of Archaeology
Colombo.



# மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு முயற்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையும் கலைக்கேசரி மாத இதழும் இணைந்து நடாத்தவுள்ள 'யாழ்ப்பாண வாழ்வியல்' என்ற தலைப்பிலான பொருட்காட்சி குறித்து வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டின் யாழ்ப்பாணத்தினது பங்களிப்பு கணிசமானதாகும். உலகமயமாதல் , திறந்த பொருளாதாரக் கொள்கை பிற் பண்பாட்டு ஊட்டம் , புலம்பெயர்வு, கையளிப்புக் குறைபாடு , பழைமை போற்றாத பண்பு முதலான பல்வேறு காரணிகளால் தொன்மைச் சிறப்புமிக்க எமது பண்பாட்டின் பல்வேறு வகைமைகளும் மிகவேகமாக வழக்கிழந்து வருகின்றன. எமது பண்பாட்டின் தனித்துவமான அடையாளங்களை உயிர்த்துடிப்புடன் தக்கவைத்து எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். இது தொடர்பில் பல்கலைக்கழகத்திற்கும் மிக முக்கிய பொறுப்பு இருப்பதாகவே நான் கருதுகிறேன். அக்கடமையின் பின்புலத்தின் எமது வரலாற்றுத் துறையும் கலைக்கேசரியும் இணைந்து இப்பொருட்காட்சியையும் அதனோடிணைந்த ஆராய்ச்சி அமர்வு மற்றும் கலாசார நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்திருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

பொருட்காட்சியில் கலை , பாரம்பரிய வைத்தியம், சமயம் , நம்பிக்கைகள் , தொழில்சார் உபகரணங்கள், புழங்கு பொருட்கள் , தொடர்பாடல் பொறிமுறைகள், பொழுதுபோக்குக் கருவிகள் முதலான பண்டைய யாழ்ப்பாணத்து மக்களின் பொருள்சார் மற்றும் பொருள்சாராப் பண்பாட்டின் பல் வேறு அம்சங்களும் காட்சிப்படுத்தப்படுவது சிறப்புக்குரியதாகும். 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற தொல்லியல் வரலாற்றுப் பொருட்காட்சிக்குப் பின்னர் மிகப்பெரிய அளவில் நடைபெறும் பொருட்காட்சி இதுவே எனலாம். எமது பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எமது பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவும் இப்பொருட்காட்சி உதவும் என்பதில் ஐயமில்லை. அரிய உழைப்பின் வெளிப்பாடாக அமையும் இப்பொருட்காட்சியை இலங்கைத் தமிழ்ச் சமூகம் உயரிய முறையில் பயன்படுத்திப் பயன் விளைக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள். இம்முயற்சியில கைகோர்த்துள்ள கலைப்பீடத்தினர் குறிப்பாக வரலாற்றுத்துறையினர் கலைக்கேசரி மாத வெளியீட்டுக் குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

**பேராசிரியர் வ. அரசரட்னம்**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் பொருட்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974இல் ஒரு வளாகமாக தொடங்கப்பட்ட நிகழ்வில் கருத்துரை வழங்கிய அரசியல் தலைவர்களும், கல்விமான்களும் பண்பாட்டால் தனித்து அடையாளப்படுத்திப் பார்க்கப்படும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மரபுரிமைகளைக் கண்டறியவும், அவற்றைப் பாதுகாக்கவும் இவ்வளாகம் களமமைத்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். அந்த நம்பிக்கையை அடைவதற்கு கடந்த காலச் சூழ்நிலைகள் பல தடைகளாக இருந்த போதிலும் பல்கலைக்கழகம் அந்த நோக்கத்கை அடையவேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்ததென்பதை கடந்த காலத்தில் நடந்தேறிய சில பண்பாட்டு நிகழ்வுகள் கோடிட்டுக்காட்டுகின்றன. அந்த நிகழ்ச்சிகளின் இன்னொரு கட்ட வளர்ச்சியாகவே இன்று தொடங்கவுள்ள 'யாழ்ப்பாணப்பண்பாடு' என்ற கருப்பொருளில் அமைந்த கண்காட்சியையும், கருத்தரங்கையும் பார்க்கிறேன்.

ஒரு வட்டாரத்தின் அல்லது ஒரு இனத்தின் தனித்துவமான அடையாளம் என்பது அப்பிரதேச மக்களின் மொழி, மதம், கலை, பண்பாடு என்பவற்றின் தொன்மை, தொடர்ச்சி, மாற்றம், வளர்ச்சி என்பவற்றின் உடாகவே பார்க்கப்படுகிறது. தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று மரபுகொண்ட நாடு என்ற பெருமைக்குரிய இலங்கை வரலாற்று மூலங்களில் இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் பாளி மொழியில் நாகதீபம் எனவும், தமிழ் மொழியில் நாகநாடு எனவும் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அந்த வரலாற்று இலக்கியங்களில் யாழ்ப்பாணத்தின் பூர்வீக பண்பாட்டு வரலாறு புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. 1970 களின் பின்னர் இலங்கைத் தொல்லியற் திணைக்களத்தினுடாக வெளிக்கிளம்பிய நவீன தொல்லியல் ஆய்வுகளும், 1980 பின்னர் எமது வரலாற்றுத் துறையினர் மேற்கொண்ட கள ஆய்வுகளும் யாழ்ப்பாணத்தின் தொடக்ககால மக்களது பண்பாட்டு வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வர உதவின. ஆயினும் அந்த வரலாற்று உண்மைகள் யாழ்ப்பாண மக்களிடமோ அல்லது இலங்கை மக்களிடமோ முழுமையாகச் சென்றடைந்ததெனக் கூறமுடியாது. 2010இல் யாழ்ப்பாணத்தில் பிராந்திய தொல்லியற் திணைக்களத்தை இலங்கை அரசு அமைத்ததை தொடர்ந்து அத்தொல்லியற் திணைக்களத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளும், யாழ்ப்பாணத்து மரபுரிமைத் தொல்லியற் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாக்க நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகளும் யாழ்ப்பாணத்து மக்களிடையே தமது மரபுரிமைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டு என்ற ஆவலை முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு ஏற்படுத்தியுள்ளது. அந்த ஆர்வத்தை ஓரளவேனும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணப்பாடு இக்கண்காட்சியின் ஒரு நோக்கமாகும்.

உலகமயமாக்கல், அதைத் தொடர்ந்து எழுந்த பின்நவீனத்துவக் கருத்துக்கள், பல்லினப்பண்பாடு பற்றிய தற்போதைய வாதங்கள் என்பன தேசம், தேசியம், நாடு என்ற எல்லைகளை உடைத்து உலக

நாடுகளை ஒன்று சேர வைத்துள்ளன. இவை தவிர்க்க முடியாத வளர்ச்சியாகப் பார்க்கப்பட்டாலும் பண்பாட்டு ரீதியில் இவை வளர்ச்சியடைந்த நாடுகளின் நாகரீகம் வளர்முக நாடுகளின் பாரம்பரிய பண்பாட்டில் மேலாதிக்கம் செலுத்த தொடங்கியுள்ளன என்பதில் சந்தேகமில்லை. இந்த மாற்றம் யாழ்ப்பாணத்திற்கும் பொருந்தும். ஒரு கிராமத்துச் சந்தையில் நவீன பாவனைப் பொருட்களை வாங்க முடியும் என்ற நிலை எமது பண்பாட்டில் நீண்ட காலம் இருந்த பாவனைப் பொருட்கள், கலை வடிவங்கள், சமயச் சின்னங்கள் மறைந்து போகக் காரணமாகிறது. இன்று அவை குறைந்த விலையில் பிற பொருட்களின் உற்பத்திக்காக விற்கப்படுவது யாழ்ப்பாணத்தில் தீவிரமாக நடைபெற்று வருவதைக் காண முடிகிறது. இவை எமது பாரம்பரிய பொருட்கள் மறைவதை மட்டும் குறிக்கவில்லை. கூடவே அவற்றின் மொழியும், அப்பொருட்களைக் கொண்டு பயன்படுத்தி வந்த சமூக, சமயச் சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் காலப்போக்கில் முற்றாக மறைந்து போவதற்கும் அவை காரணமாக அமைகின்றன. ஆகவே அத்தகைய பொருட்களை காட்சிப்படுத்துவதன் மூலம் எமது பாரம்பரிய சடங்கு முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் பாதுகாத்துக் கொள்வது இக்கண்காட்சியின் இன்னொரு முக்கிய நோக்கமாகும். இன்னொருவகையில் கூறுவதானால் நாம் எந்கிருந்து வந்தோம் என்பதை எடுத்துக்காட்டி, எங்கே செல்கிறோம் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்வதாக இக்கண்காட்சி அமைகிறது.

இந்த இடத்தில் இந்த மாபெரும் பொருட்காட்சி நடைபெற காரணகர்த்தாவாக இருக்கும் கலைக்கேசரி குடும்பத்திற்கும், பொருட்காட்சிக்கு வேண்டிய அனைத்து தேவைகளையும் உரிய காலத்தில் நிறைவேற்றித் தந்த துணைவேந்தர் அவர்களுக்கும், மற்றும் கலைப்பீடாதிபதி அவர்களுக்கும் பொருட்காட்சிக்கு வேண்டிய பயனுள்ள படங்களைத் தந்துதவிய இலங்கைத் தொல்லியற் திணைக்களத்திற்கும், இரவு பகல் பாராது கடந்த ஒரு மாதகாலமாக இப்பணியில் ஈடுபட்டு வரும் எனது சக ஆசிரியர்களுக்கும், என் மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் இதயபூர்வமான என் நன்றிகள். அவர்களின் நோக்கம் நிறைவேற இறைவனைப் பிராத்திக்கிறேன்.

**பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்**
தலைவர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.



# காலத்தின் தேவையை உணர்ந்து செயற்படுதலும் பத்திரிகையின் பணியாகும்

யாழ்ப்பாண வாழ்வியல் எனும் மாபெரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பொருட்காட்சியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடள் இணைந்து கலைக்கேசரி நடாத்துவதில் நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். செய்திகளை வெளியிடுவதுடன் மட்டும் ஒரு பத்திரிகை நிறுவனத்தின் சமூகப் பொறுப்பை அல்லது பணியை மட்டுப்படுத்தி விட முடியாது. அதற்கும் அப்பால் சென்று அந்தந்த சமுதாயத்தினது காலத்தின் தேவைவை உணர்ந்து பொறுப்புடன் பணியாற்றும் தார்மீக கடமையும் ஒரு பத்திரிகைக்கு உண்டு.

மேலை நாடுகளில் அகழ்வாராய்ச்சித்துறை, தொல்லியல்துறை, வரலாற்றியல் போன்ற துறைகளில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமது மூதாதையரின் வாழ்வியல் முறைகள், பண்பாடுகள், பாரம்பரியங்களை உயிரை விட மேலாக மதித்து, தனித்துவம் கெடாது போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். எமது இளம் சந்தியினரிடம் இந்த சிந்தனை உணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் எமது மூதாதையர்களின் வாழ்வியல் முறைகளை நாம் அறிந்து தனித்துவங்கள் மறையாது பாதுகாத்து அவற்றை அடுத்த சந்ததியினரின் கைகளில் ஒப்படைப்பதற்கும் ஏதுவாக இப்பொருட்காட்சியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளோம்.

உலகமெங்கும் பரவலாக கோடிக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள் என பெருமைப்பட்டுக்கொள்ளும் எமக்கு எமது மூதாதையர்களின் வாழ்வியல் குறித்த தெளிவும் அவசியமாகும். ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்ற மகுடத்திலிருக்கும் பத்திரிகை இத்'தெளிவை உருவாக்கும் பொறுப்பிலிருந்து நழுவிவிட முடியாது. ஊடகங்கள் மத்தியில் புரிந்துணர்வு மற்றும் நட்புறவுடன் கூடிய செயற்பாட்டின் மூலம் இந்த இலக்கை எட்ட முடியும்.

**மா. கந்தசாமி**
பொது முகாமையாளர்,
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் (பிரைவெட்) லிமிட்டெட்
*24.09.2011*

# நல்லூர் இராசதானிக் காலத்தை நினைவுபடுத்தும் சங்கிலியன் தோப்பு

**சசிதா குமாரதேவன்**
**விரிவுரையாளர் (வரலாற்றுத்துறை)**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

தமிழ் மக்கள் நல்லூரைத் தமது அரச பாரம்பரியத்தின் மையமாகக் கருதும் மரபு நீண்ட காலமாகவிருந்து வருகிறது. இதற்கு மன்னர் ஆளுகைக்கு உட்பட்ட 450 ஆண்டுகளுக்கு முன்னர் தலை நகராக இருந்த தென்னிலங்கை இராசதானிகள் இன்னும் தலைநகர்களாகக் காட்சியளிப்பது போல் நல்லூர் ஒரு இராசதானியாக இருந்ததற்குரிய பண்டைய அரச சின்னங்கள் எவையும் அக்காலத்திற்குரிய அதே வடிவத்தில் காணப்படவில்லை. இருப்பினும் ஒரு அரச தலைநகராக முன்பிருந்திருக்கலாம் என்பதற்குரிய சில சுவடுகள் இங்கே காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றே சங்கிலியன் தோரணவாசலாகும்.

முத்திரைச் சந்திக்கு வடக்கே சில யார் தூரத்தில் வலது பக்கமாக இத் தோரண வாசல் அமைந்துள்ளது. நீண்ட காலம் கவனிப்பாரற்ற நிலையில் இருந்த இக் கட்டடத் தொகுதி தற்போது நல்லூரில் இருந்த இராசதானியை நினைவுபடுத்தும் ஒரு நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக கலைவிழா மலர்களையும் தமிழ் மன்னர் கால வரலாற்று நூல்களையும் அலங்கரித்த இந்நினைவுச் சின்னம் யார் காலத்திற்கட்டப்பட்ட தென்பதிற் கருத்து முரண்பாடுகள் உள்ளன.

சிலர் இதனைச் சங்கிலி மன்னனின் அரசமாளிகை வாசல் எனவும் வேறு சிலர் யாழ்ப்பாண மக்களின் அடிமை வாழ்வு நினைவுச் சின்னம் எனவும் கூறியுள்ளனர்.

இக்கட்டமும் இதன் கலை மரபும் ஒல்லாந்தர் காலத்திற்குரியவை என்பதில் ஐயமில்லை. இதையொத்த கலைமரபுடைய கட்டடத் தொகுதிகள் பலவற்றை இன்னும் பறங்கித் தெருவில் உள்ள வீடுகளிற் காணலாம்.

இருந்தும் ஒல்லாந்தர் காலத்தில் நல்லூரில் இக்கட்டடம் அமைக்கப்பட்மைக்கு இவர்களுக்கு முன்னோடியாகத் தமிழ் மன்னர் கால இராசதானி இவ்விடங்களில் மன்னர்களின் வரலாற்றுச் சாதனைகள் மறைந்து கிடக்கின்றன என்பதை இவ்விடயங்களை ஆராய்வதன் மூலம் கண்டு கொள்ளலாம். இது பற்றி 1809 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரச அதிகாரியொருவர் தமது நினைவுப் பதிவேட்டில் கூறியுள்ளதை இங்கு நினைவில் கொள்ளலாம். பருத்தித்துறை வீதியிலே நல்லூரில் உள்ள யாழ்ப்பாண மன்னர் இருந்த



இடத்தைத் தரிசிக்கச் சென்றேன். இது சங்கிலித் தோப்பு என்ற கடைசியாக ஆட்சிபுரிந்த சங்கிலி மன்னன் பெயரால் அழைக்கப்பட்டது. இது இப்பொழுது கோயில் ஆதனம் ஆகும். இங்கே ஒரு பழைய வாசல் கட்டடம் உண்டு. இது டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) காலக்கட்டடம் ஆகும். இங்கே இது எப்படி எழுந்தது என்பதற்கு விளக்கம் யாதெனில் டச்சுக் கம்பனியார் நல்லூரிலே தங்கள் தலைமைக் காரியாலயத்தை ஒரு பொழுது நிறுவியிருக்கலாம் அல்லது இது கொம்மாந்தரின் கிராமிய வாசஸ்தலமாக அமைக்கப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிடலாம்.

இக்கூற்றில் இருந்து யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்ட போர்த்துக்கேயரும் பின்வந்த ஒல்லாந்தரும் தமிழ் மன்னர்களின் இராசதானி இருந்த இடத்திலே தங்கள் முக்கிய நிர்வாகமையங்களை அமைத்துக் கொண்டனர் என்பதும் இதற்கான கட்டடங்களை இராதசதானி காலக் கட்டடங்களைக் கொண்டு தமது கலை மரபில் அமைத்துக்கொண்டனர் என்பதும் புலனாகிறது. இதனால் இன்று பாதுகாக்கப்பட்டுள்ள சங்கிலியன் தோப்புக் கல்வாசல் அன்னியர் ஆதிக்க நினைவுச்சின்னமாக இருப்பினும் அதன் பின்னால் நல்லூர் இராசதானி கால வரலாறும் இணைந்துள்ளதெனக் கூறலாம். இதனால் இவற்றைப் பாதுகாப்பது அவசியமாகிறது.

மேலும் இவர்கள் காலத்திற்குரியதெனக் கருதப்படும் கட்டட அழிபாடுகள் சில இக் கல்தோரண வாசலுக்கு சற்றுக் கிழக்கேயுள்ள சங்கிலித் தோப்பு மேட்டிலும், யமுனா ஏரியைச் சுற்றியும் காணப்படுகின்றன. இவை ஒல்லாந்தர் காலத்தில் இயங்கிய கல்விக் கூடத்தின் அழிபாடுகள் எனத் தொல்லியலாளர் கருதுகின்றனர்.

இன்று இவ்விடம் பல்வேறு தொழிற்சாலைகளையும் பல பிற்காலக் கட்டடங்களையும் முத்திரைச் சந்தியில் புரட்டஸ்தாந்து தேவாலயத்தையும் கொண்டுள்ளது. அத்திவாரங்களின் கீழ்ப் பண்டைக்காலக் கட்டட அழிபாடுகள் இன்றும் காணப்படுவதாக கூறப்படுகின்றது. 1957 ஆம் ஆண்டில் இப்பகுதியில் ஆய்வினை மேற்கொண்ட சண்முகநாதன் என்பார் இக்கட்டட அழிபாடுகளிடையே சங்கிலி மன்னன் கால அரண்மனையின் அத்திவாரங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். இன்றும் இங்குள்ள குளத்தையும் வைரவர் கோவில் அத்திவாரங்களையும், செங்கட்டிகளையும், ஓடுகளையும், மட்பாண்டங்களையும் அவதானிக்கலாம். இவற்றுட் பல தமிழ் மன்னன் காலத்திற்குரியவையாகும்.



# ஓய்வுபெற்ற சமஸ்கிருத பேராசிரியர் வி.சிவசாமி அவர்களின் வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையும், வீரகேசரி நிறுவனத்தைச் சேர்ந்த கலைக்கேசரியும் இணைந்து 'யாழ்ப்பாண வாழ்வியல்' என்ற தலைப்பிலான மிகப் பெரிய கண்காட்சியொன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே எதிர்வரும் 24 - 27 வரையுள்ள நாட்களிலே மிகப் பெரிய அளவிலே விரிவாக நடத்தவுள்ளனர்.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் குறிப்பிட்டவிடயங்கள் தொடர்பான கண்காட்சிகள் நடைபெற்றுள்ளன. இக் கண்காட்சி முழுமையாக, இதுவரை நடாத்தப்படாத ஒன்றாகவே மிளிரும் எனக் கலைக்கேசரியைச் சேர்ந்த அன்பர்கள் மிக ஆவலுடன் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணச் சமூகத்திற்கு இத்தகைய கண்காட்சி இப்போது தேவைதானா? என்ற வினாவும் எழலாம். யாழ்ப்பாண வாழ்வியலின் முக்கியமான அமிசங்களையும், அவற்றின் இன்றைய நிலைபற்றியும் சிறிதளவாவது குறிப்பிட்ட பின்னர் முற்குறிப்பிட்ட வினாவுக்குத் தகுந்த விடையளிக்கலாம்.

இலங்கையின் வெவ்வேறு பிராந்தியங்களுக்கும் பொதுப்பண்புகளும், தனிச்சிறப்பான பண்புகளும் உள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண பிராந்தியத்திற்கும் தனிச்சிறப்பான அமிசங்கள் உள்ளன.

இங்கு வாழ்கின்ற மக்களிலே மிகப்பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இவர்களைவிட சிறிய தொகை முஸ்லிம்களும், சிங்கள மக்களும் வாழ்கின்றனர். இப்பிராந்தியத்திலே சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.என்பது இலக்கிய, தற்போது குறிப்பாகத் தொல்லியல் மூலங்கள் மூலம் நன்கு அறியப்படுகின்றது. குறிப்பாகப் பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்களும் பிறவும் கவனித்தற்பாலன. இங்கு பேசப்படுவது தூய பழைமையான தமிழ் என்றே பலரும் கூறுகின்றனர். யாழ்ப்பாணத்திற்கு வெளியே பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ள சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக்கல்வெட்டுக்களில் வரும் பருமக (பெருமகன்), மருமகன், மருமான், நாடு, மலை போன்ற தமிழ்ச் சொற்கள் இன்றும் யாழ்ப்பாணத்தமிழ் வழக்கில் உள்ளன. மேலும் இந்தியாவிலுள்ள மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவரும் தமிழ் உட்பட பல்வேறு மொழிகளை நன்கு அறிந்தவரும் கல்கத்தா பல்கலைக்கழக மொழியியற் பேராசிரியரும் மேற்கு வங்க மாநில சட்ட மேல்சபைத் தலைவருமான புகழ் பெற்ற சுநீதிகுமார் சட்டஜி இதுபற்றி என்னுடைய குருநாதர் கலாநிதி ம.த.பாலசுப்ரமணியம் அவர்களுக்குக் சிறப்பாகக் குறிப்பிட்டதாவது ''யாழ்ப்பாணத் தமிழ் அதுவே தூய்மையான சுத்தமான தமிழ் '' என்பதாகும். தமிழகத்திலே பேசப்படும், எழுதப்படும் தமிழிலே பிறமொழிச் சொற்கள் அதிகம் உள்ளன. ஆனால் இங்கு அப்படியன்று. எனினும் இப்போக்கு சிறிது மாறுவதாக அண்மையிலே யாழ்ப்பாணத்திலிருந்து வரும் புதினப் பத்திரிகையிலே ஓர் அன்பர் கவலையுடன் இது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். தேவையில்லாத பிற மொழிச் சொற்களைத் தவிர்த்தல் நன்றே. காலத்தின் தேவைக்கேற்ப புதிய சொற்கள், சொற்றொடர்கள் தமிழ் மரபை மீறாது உருவாக்குதல் அவசியமே.

இப்பிராந்தியத்தில் வாழுகின்ற மக்கள் - இந்துக்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் அனைவரும் பொதுவாக சமயப்பற்றுள்ளவர்கள். இந்துக்கள் - குறிப்பாக சைவர்களைப் பொறுத்த மட்டில் சமய அனுஷ்டானம், கிரியைகள், மெய்யியல் முதலானவற்றினை ஒழுங்காக கடைப்பிடிப்பவர்கள். தமிழகத்திலும் பார்க்க இங்கு சமய ஒழுங்கு முறைகள் நன்கு பின்பற்றப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதற்கு நாவலர் பெருமான், அவரின் வழிகாட்டலில் வந்தவர்கள் ஒரு முக்கிய காரணமாகும். குறிப்பாக 'யாழ்ப்பாண கலாசாரம்' கந்தபுராண கலாசாரம் என பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இன்று இதனை அனுசரிப்பவர்கள் தொகை குறைவாகவே உள்ளது.

யாழ்ப்பாணச் சமூகம் சில குறைபாடுகள் இருந்தாலும் ஒரு கட்டுக்கோப்புள்ள அமைப்பை கொண்டிலங்கி வந்துள்ளது. குறிப்பிட்ட ஊர், கிராமங்களிலே பொதுவான ஒற்றுமை, ஊர்ப்பற்று நிலவி வந்துள்ளது. இன்று இதிலே பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டன. உள்நாட்டுக் குழப்பங்கள், இடப்பெயர்வுகள் இதற்குச் சில காரணங்களாகும்.

கல்வியைப் பொறுத்தளவில் யாழ்ப்பாண சமூகம் கல்விக்கு முதன்மையளித்தே வந்துள்ளது. எவ்வாறாயினும் கற்றல் அவசியமென 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற இலக்கு நிலவி வந்துள்ளது.

விஞ்ஞானம், கலை பற்றிய அறிவியல்கள் போற்றப்படுகின்றன. தமிழ் மட்டுமன்றி சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் வெவ்வேறு மட்டங்களில் கற்கப்பட்டு வந்துள்ளன. இவற்றை விட நாடகங்கள், சாஸ்திரிய இசை, சாஸ்திரிய நடனம், வாத்திய இசை, கிராமிய இசை, நடனங்கள், கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலியனவும் போற்றப்பட்டு வந்துள்ளன. மங்கல இசையாகிய நாதஸ்வரம், தவில் கலைகளும் பிரபல்யமடைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட அறிவியல்களில் சிலர் மிகப் பிரபல்யம் அடைந்து இந்தியாவிலும் வேறு இடங்களிலும் புகழ்பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண அரசினுடைய இலட்சினையான நந்தி இங்கு நிலவும் பிரதான சமயமான சைவ சமய ரீதியிலும், இங்குள்ள பிரதான தொழிலான விவசாய ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் சின்னமாக வரலாற்று நோக்கிலே பயன்படுத்தப்படுகின்றது.

இப்பிராந்தியத்திலுள்ள சமூகம் இயற்கை சூழ்நிலையிலுள்ள வளங்களைப் பயன்படுத்தியே பெரிதும் வாழ்ந்துள்ளது. விவசாயம், தோட்டம் செய்தல், மீன்பிடித்தல், குடிசைத்தொழில்கள் முதலியன குறிப்பிடற்பாலன. இங்கு பரவலாகக் காணப்படும் பனை கற்பகதரு என சிறப்பித்துக் கூறப்படும். ஒல்லாந்தர் ஆட்சியின் போது இதுவே யாழ்ப்பாணத்தின் சிறப்பான சின்னமாக விளங்கிற்று. அதன் எல்லாப் பகுதிகளும் ஏதோ வகையிலே பயன்படும். கி.பி 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 18ம் நூற்றாண்டிலும் இங்கு ஆட்சி செய்த ஒல்லாந்தரின் ஆவணங்களின்படி மக்களுக்கு ஓராண்டிற்கு சுமார் மூன்று மாதத்திற்கு தேவையான உணவு பனையிலிருந்து பெறப்பட்டதாகும். பல்வேறு வகையான தானியங்கள் - நெல் மட்டுமன்றி வரகு, தினை, சாமி, பயறு, உழுந்து முதலிய உபஉணவுத்தானியங்களும் பிறவும் பயிரிடப்பட்டன. காய்கறி வகைகள் பயிரிடப்பட்டன. எனினும் உணவுப்பற்றாக்குறை ஓரளவு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. எனவே பிற இடங்களிலிருந்தும் உணவு கொண்டு வரப்பட்டது. தற்போது வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் தானியங்களும், உணவுவகைகளும் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டுக்குழப்பங்களால் பெருந்தொகையான பனைகளும் அழிக்கப்பட்டுள்ளமை மிகக்கவலைக்குரியதாகும். மீளவும் பனைகள் பெரிய அளவில் உண்டாக்கப்பட வேண்டும்.

மக்களுடைய இருப்பிடங்கள் பொதுவாக மண், மரம், ஓலை, சுண்ணாம்புக்கல் முதலியனவற்றாலும், சாந்து, சீமெந்து முதலியனவற்றாலும் வசதிக்கேற்றபடி அமைக்கப்பட்டு வந்துள்ளன. மக்களின் ஆடைகள், அணிகலன்களும் குறிப்பிடற்பாலன. இப்போது ஒருசாரார் கூடுதலாக மேலைத்தேய உடைகளும் பயன்படுத்துகின்றனர். ஆனால் முக்கியமான வைபவங்கள், கோவில் விழாக்கள், பு??சைகள், திருமணம், மரணம் போன்றவற்றில் பெரும்பாலானோர் தங்கள் சுதேச ஆடைகளை அணிந்தே சமுகமளிக்கின்றனர்.

இவ்வாறு யாழ்ப்பாண வாழ்வியலின் சில முக்கியமான கூறுகள் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றிலே சமகாலத்திலே சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, ஏற்படுகின்றன. பழையன சிலவற்றை இன்றைய சந்ததியினர் அறியமாட்டார்கள். சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு ஏற்பட்ட உள்நாட்டுக்குழப்பங்கள், இடப்பெயர்வுகள் உலகலாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் கோளமயமாக்கம் முதலியனவற்றாலும் புதிய ஊடகங்கள் சிலவற்றாலும் ''பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவில கால வகையினானே'' என நன்னூல் ஆசிரியர் கூறியிருப்பதாலும் மாற்றங்கள் ஏதோவகையில் ஏற்படுதல் இயல்பே. ஆனால் இம்மாற்றங்கள் இப்பிராந்திய வாழ்வியலின் பிரதான அம்சங்களை ?? வேர்களை - மரபுகளை அழிக்கவிடக் கூடாது. அவ்வாறு ஏற்படாவிட்டால் இப்பிராந்தியத்திற்கான தனிச்சிறப்பு அற்றுப்போகும். எனினும் கடந்த கால வாழ்வியல் அம்சங்களையும், சமகால அம்சங்களையும் ஒப்பிட்டு நோக்குகையில் இக்கண்காட்சி மூலம் எமது தற்போதைய யதார்த்த நிலை தெட்டத் தெளிவாகப் புலப்படவேண்டும். இவற்றை அறிவதன் மூலம் எவ்வாறு எந்த அளவுக்கு அவதானமாகவும், யதார்த்தமாகவும் சிந்திக்கவேண்டிய நிலையும் ஏற்படவேண்டும்.

எனவே இக்கண்காட்சியை காலத்தின் தேவை எனக் கருதலாம். இதனை அனைவரும் நன்கு அவதானித்து நற்பலனடைவார்களாக! இக்கண்காட்சி நன்கு நடைபெறவும், இதனை ஒழுங்குபடுத்துவோரின் இலக்குகள் நிறைவேறவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துரையைக் கூறவிரும்புகிறேன். மேலும் இக்கண்காட்சி நன்கு நடைபெற்றுத் தக்க பயனடைவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக!

# யாழ்ப்பாணத்தில் பூர்வீக மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகள்

**ரேணுகா சின்னராசா**
முன்னாள் உதவி விரிவுரையாளர் (தொல்லியல்), யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

தற்போது யாழ்ப்பாணத்தில் பண்பாட்டில் உள்ள பாவனைப்பொருட்கள் எல்லாம் பிற்காலத்தில் தற் செயலாகத் தோற்றியவையல்ல. பலவற்றுக்குத் தொன்மையான தொடர்ச்சியான வரலாறு உண்டு ஆனால் அவை தொழிநுட்ப வளர்ச்சி நாகரீக மாற்றம் பிற பண்பாட்டுச் செல்வாக்கு என்பவற்றுக்கு ஏற்ப பல மாற்றங்களைப் பெற்றுத் தற்காலத்தில் புதிய தோற்றத்துடன் காணப்படுகின்றன. அதற்கு உதாரணமதாக யாழ்ப்பாணத்தில் பண்டைய கால மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகளைக் குறிப்பிடலாம்.

1971 ஆம் ஆண்டு பென்சில்வேனிய பல்கலைக்கழக அரும் பொருள் ஆய்வாளரான விமலா பேக்லே, கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் மூலம் ஏறக்குறைய இற்றைக்கு 3000 ஆண்டில் இருந்து இங்கு மனித வரலாறு தொடங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக்குடியேற்றத்தை முதலில் ஏற்படுத்தியவர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய திராவிடர் என்பது அவரது கருத்தாகும். இவர்கள் பயன்படுத்திய பலவகைப்பட்ட மட்பாண்டங்கள், கைவினைப்பொருட்கள், கல் மணிகள் , இரும்புக் கருவிகள் சமகாலத் தமிழக பெருங்காலப் மக்கள் பயன்படுத்திய பொருட்கள் ஒத்துக் காணப்பட்டதால் அங்கிருந்தே இம்மக்கள் முதலில் இங்கு வந்து குடியேறி இருக்க வேண்டும் என்பது தொல்லியலாளர்களின் பொதுவான கருத்தாகும். இம்மக்களே சம காலத்திலும் சற்றுப் பிற்பட்ட காலத்திலும் யாழ்ப்பாணத்தில் ஏனைய இடங்களிலும் குடியேறி இருந்தனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் புராதன குடியிருப்புகள் பற்றி ஆய்வு செய்த கலாநிதி இரகுபதி ஏறத்தாழ 40 இற்கு மேற்பட்ட இடங்களில் இரு பூர்வீகக் குடியிருப்புகள் இருந்ததற்கான தொல்லியல் ஆதாரங்களை வெளிப்படுத்தியுள்ளார். இக்குடியிருப்புகள் பெரும்பாலும் கடற்கரையை அண்டிய மணற்பாங்கான இடங்களிலேயே முதலிற் ஏற்பட்டிருந்ததனைக் காணமுடிகிறது. இதற்கு அதிக தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தாது அழிக்கக் கூடிய பற்றைக்காடுகள் இலகுவாக நீர்ப்பெறக்கூடிய மண்தன்மை கடல் உணவைப் பெறக்கூடிய ஆழம் குறைந்த பரவைக்கடல், கடல், தரை வழிப்போக்குவரத்துக்குச் சாதனமாக தரைத்தோற்றம் என்பவற்றுக்கு இவ்விடங்கள் சாதகமாக இருந்தமை முக்கிய காரணிகள் ஆகும்.

இதனால் மணற்பாங்கான கடற்கரைப் பகுதியில் குடியிருப்புகளை ஏற்படுத்தி மக்கள் முதலில் அவ்விடங்களில் கிடைத்த மூலவளங்களுக்கு ஏற்பத் தமது தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அவற்றுள் அவர்களது நாளாந்த வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாக இருந்த நீரைப் பெறுவதற்கு அவர்கள் கையாண்ட தொழிநுட்பம் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.



பொதுவாக வைரமான மண்ணுள்ள இடங்க ளில் நீரைப்பெறுவதற்கு கூடிய தொழிநுட்ப மும் அதிக மனித வலுவும் நீண்ட காலமும் தேவையானால் அவ்வாறான தொழிநுட்பம் அன்றைய காலகட்டத்தில் இலங்கையில் வளரவில்லை. தென்னிலங்கையில் இயற்கை யாகத் தோன்றிய ஆறுகள், குளங்கள் நீர் போக்குவரத்துக்குச் சாதகமாக இருந்தமையால் மக்கள் அவ்விடங்களை அண்டிக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அந்தவாய்ப்புகள் இல்லை. அதனால்தான் சிறிய தொழிநுட்பத்துடன் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்களில் குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.



அவ்வாறு குடியிருப்புகளை ஏற்படுத்திய மக்கள் தமக்கு வேண்டிய நீரைப் மணற்பாங்கான இடங்களில் சிறிய குழியை அல்லது கிணற்றை ஏற்படுத்தி இல குவாகப் பெற்றுக் கொண்டனர். ஆயினும் அக்கிணறுகள் அல்லது குழிகள் காற்றாலும் மழையாலும் இலகுவாக மறைந்து போகும் தன்மையைக் கொண்டி ருந்தன.

இதனால் அவற்றை அழியாது பாதுகாக்க புதிய தொழிநுட்பத்தைப் பயன்ப டுத்த வேண்டிய தேவை இருந்தது. அதன் விளைவே கட்ட மண்ணைப் பயன்ப டுத்தி அமைக்கப்பட்ட சுடு மண் கிணறுகள் தோன்றக் காரணமாயின. இதை யாழ்ப்பாணத்தின் பூர்வீக மக்கள் பயன்படுத்திய முதலாவது தொழிநுட்பங்களில் ஒன்று எனவும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆயினும் இது யாழ்ப்பாண மக்கள் கண்டுபிடித்த தொழில்நுட்பம் அன்று. இந்தியாவில் சிந்துவெளி நாகரிக காலம்தொட்டு இதன் பயன்பாடு இருந் துள்ளது. இலங்கைப் பிரதேசத்தில் கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் இது 2ஆவது நகர மயமாக்கத்துடன் அதிக அளவில் பயன்படுத்தியதற்கு ஆதாரம் உண்டு. தமிழகத் தில் அரிக்க மேட்டு பெருங்கற்கால மக்கள் சாயவேரைப் பதனிடவும் , குடிநீரைப் பெறவும் கழிவு நீரைத் தேக்கி வைக்கவும் இவ்வகையான சுடுமண் கிணறு களைப் பயன்படுத்தினார். இதன்பயன்பாடு ஆதிகாலத்தில் மட்டுமன்றி மிக அண் மைக்காலம் வரை தமிழகத்திலும் இலங்கையிலும் பயன்பாட்டில் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. குறிப்பாகப் பெருநிலப்பரப்பில் ஒல்லாந்தர் ஆட்சியில் சாய வேர் பதனிடலுக்கும் நல்ல நீரைப் பெறுவதற்கும் இச்சுடுமண் கிணறுகள் அமைக்கப்பட்டன.

ஆயினும் 2004 ஆம் ஆண்டு வேலணையில் சாட்டி என்ற இடத்தில் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் யாழ். பல்கலைக்கழகத் தொல்லியல் மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்ட புராதன சுடுமண் கிணறு இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கடற்கரையை அண்டிய இவ்விடம் முன்பு மணல்மேடுகளாக இருந்ததாக அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். ஆனால் நாம் ஆய்வு மேற்கொண்ட காலத்தில் அவ்விடம் கடலுடன் தொடர்புடைய சிறிய பள்ளமாகவே இருந்தது . இருப்பினும் முன்னொரு காலத்தில் இவ்விடங்களில் மக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்தும் மண் மேடுகள் சிறிய பற்றைக்காடுகளுடன் காணப்பட்டன. அவ்வாறான மேடு ஒன்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது ஏறத்தாழ 12 அடி ஆழத்தில் பண்டைய மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது.

இச்சுடுமண் கிணறு வட்ட வடிவில் சிறு சிறு துண்டுகளாகச் சுடப்பட்ட களிமண் தட்டுகளைக் கொண்டு வட்டவடிவில் கட்டப்பட்டிருந்தது. எமது ஆய்வின் போது 3 அடுக்குகளின் கட்டப்பட்ட சுடு மண் கிணற்றின் முழுப்பாகத்தையும் கண்டறிய முடியாத அளவுக்கு நீர் பெருக்கெடுத்து அதன் சுற்றுப்புறங்கள் நீரும் வீழ்ந்து மூழ்கியதால் அதன் எஞ்சிய பாகங்களைக் கண்டறிய முடியவில்லை. இதனால் கிடைத்த பகாகங்களைக் கொண்டு சுடுமண் கிணறு எவ்வாறு இருந்ததென அடையாளம் காண முடிந்தது.

சுடுமண் காணப்பட்ட இடத்தில் மேற்படையிலிருந்து 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட முத்திரை, நாணயம், ரோமர்கால மட்பாண்ட ஓடுகள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்திருப்பதால் இச்சுடுமண் கிணறு இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என கூறலாம்.

இவ்வகையான சுடுமண் கிணறுகள் சாட்டியில் மட்டுமன்றி வல்லிபுரம், பொன்னா வெளி போன்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இச்சுடுமண் கிணறுகளுக்குப் பதிலாகப் பெரிய மரங்களை வட்டமாக அறுத்து அதன் உட்பாகங்களைக் கோதியதன் பின்னர் அவற்றை மணற்பாங் கான இடங்களில் புதைத்து , கழிவுப்பொருட்கள் , மண் என்பன உள்ளே செல்லாதவாறு தடுத்து மக்கள் நீரைப்பெற்றனர். அவை கொட்டுக் கிணறுகள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற்றின் பயன் பாடு இன்றும் சில இடங்களில் காணப்படுகின்றன. இதன் இன்னொரு கட்ட வளர்ச்சியே கல்லினாலும் பின்னர் சீமெந்தினாலும் கட்டப்பட்ட கிணறுகளாகும்.

# யாழ்ப்பாண வாழ்வியலில் இந்துசமயக் கல்வி ஒரு நோக்கு

**திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன், எம்.பில்**
முதுநிலை விரிவுரையாளர், தரம் 1,
இந்து நாகரீகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் தமிழையும் இந்து சமயத்தையும் இரண்டு கண்களாக கட்டிக்காத்து கந்தபுராண கலாசாரத்தை அடியொற்றித் தமக்குரிய தனித்துவமான கலை, பண்பாட்டு, சமய விழுமியங்களைப் பேணி வரும் நாகரீகமிக்க சமூக கூட்டத்தினர் வாழும் பிரதேசமாகும். இந்து மதமானது உலகிலேயே மூன்றாவது பெரிய மதமாகக் கொள்ளப்படுவதுடன் உலக சனத்தொகையில் 15 சதவீதமும் (950 மில்லியன் மக்கள்) இலங்கையில் மொத்த சனத்தொகையில் 15 சதவீதமும் யாழ்ப்பாண பிரதேசத்தில் 86 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்களினால் பின்பற்றப்பட்டு வருவதுமாகும்.

ஒழுக்க நெறியைப்புகட்டி அந்நெறிப்படி நிற்கச்செய்யும் கல்வியே சமயக் கல்வி ஆகும். சமயக் கல்வியானது தனிப்பட்ட நபரின் வாழ்க்கையையும் அதே நேரத்தில் நாட்டின், சமூகங்களின் சிறந்த ஒழுக்க, கலாசாரத்தை உருவாக்கும் ஒரு பலம் வாய்ந்த கருவியாகவும் விளங்குகின்றது. ஆதலால் சமயக் கல்வியை உரிய முறைப்படி புகட்டுவது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. சமய பாடத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடானது வெறும் போதனையாகவோ அல்லது பரீட்சை நோக்காகவோ அமையாமல் நடைமுறைப்பாங்குடையதாக அமைய வேண்டியது அவசியமாகும். இவ் இலக்கை அடைவதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனம் காணுதலும் இந்து சமய கல்வி வளர்ச்சிக்கான சிந்தனைகளை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.



# ஆரோக்கிய நிலையை பேணுவதில் 'பன்னம் பிட்டு' பாரம்பரிய உணவின் பயன்பாடு விவரண ஆய்வு

**வைத்திய கலாநிதி - விவியன் சத்தியசீலன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவப் பிரிவு,**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய உணவுகளின் பயன்பாடு பன்னெடுங்காலமாக பழக்கத்தில் உள்ளது. இவ்வுணவுப் பழக்க வழக்கங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேசத்திற்கும் வேறுபாடுடையதாகக் காணப்படுகின்றது. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் எனப் பல்வேறு பிரதேசங்கள் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாகக் காணப்படுகின்றன. வடமராட்சியில் ''பருத்தித்துறை வடை'' மிகப் பிரபல்யமான உணவாகும். தென்மராட்சிப்பகுதியில் ''பொருத்துமான்'' மூலிகை பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பாசய உதிரப்போக்கை கட்டுப்படுத்துவதற்கு உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. தீவகப் பிரதேசத்தில் ''பெருங்குறிஞ்சா'' மூலிகை மேற்படி ரோகத்திற்காக உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

சித்தமருத்துவத்தில் ''உணவே மருந்து, மருந்தே உணவு'' என்ற கோட்பாட்டுக்கு ஏற்ப மூலிகைகள் உணவு மூலம் நோய் நிவாரணியாகச் செயற்படுகின்றன. ஆரம்ப காலத்தில் மனிதன் நோய் உபாதையில் இருந்து விடுபடுவதற்கு சில உணவு முறைகளை அறிந்திருந்தான். ஆய்வாளர்கள் தமது கள ஆய்விற்காக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கு சென்று மூலிகைகளை ஆய்வு செய்த போது தீவகப்பிரதேசத்தில் பன்னம் பிட்டு பாவனை முறை இருந்ததும் இவ்வுணவு முறை அருகி வருவதையும் அறிந்தனர்.

தீவகப்பிரதேசம் விவசாய, கடற்றொழில் போன்ற கடின உடல் உழைப்பு உள்ள இடமாகும். இங்கு வேலை செய்பவர்கள் தமது உடல் வேதனை, உழைவு, தீருவதற்கு பன்னம் பிட்டு அவித்து உட்கொள்வது அவர்களின் முக்கிய நோய் நிவாரணியாக இருந்து வந்துள்ளது என்பது கள ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. 1991 ஆண்டுக்குப் பின் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதாலும் வயோதிபர்களின் இறப்பும் இப்பாட்டி வைத்திய முறை அருகி வந்துள்ளதுக்குக் காரணமாகும். அத்துடன் வலி நிவாரணி மருந்துகளின் தோற்றமும் பாவனையும் மக்களிடத்தில் அதிகமாக பழக்கத்தில் உள்ளதாலும் மிக இலகுவாக பெறக்கூடியதாக உள்ளதாலும் பழையன கழிந்து புதியன புகுந்து விட்டன. வலி நிவாரண மருந்து அளவுக்கதிகமாக பாவித்து ஈரல் பாதிப்படைந்தவர்களின் பட்டியல் நீண்டு கொண்டு போகும் இத் தருணத்தில் செயற்கையாக தயாரிக்கப்படும் மருந்துகளின் பக்க விளைவுகளை கருத்தில் கொண்டு ஆரம்ப பராமரிப்பு முறைகள்,நோய் தடுப்பு முறைகளை மூலிகைகளைப் பயன்படுத்தி ஆரோக்கிய வாழ்க்கை வாழ வேண்டிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பது இந்த ஆய்வின் இலக்காகும்.



# நெடுந்தீவின் வரலாற்றுப் பெருமையை எடுத்துக் கூறும் நினைவுச் சின்னங்கள்

## ஒரு தொல்லியல் சுற்றுலா

**பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

தொல்லியலாளரால் அதிகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத பிராந்தியங்களில் நெடுந்தீவும் ஒன்றாகும். பெயருக்கு ஏற்ப அது நீண்ட தீவு மட்டுமல்ல அதற்கொரு நீண்ட பாராம்பரிய வரலாறும் உண்டு என்பதை அங்கு சிதைவுறும் தொல்லியல் நினைவுச் சின்னங்கள் எடுத்துக் கூறுகின்றன. நெடுந்தீவின் வரலாறு பதினேழாம் நூற்றாண்டின் பின்னர் வெளிச்சத்திற்கு வருவதற்கு ஐரோப்பியர் ஆட்சிக் காலம் காரணம் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்களில் ஒல்லாந்தர் ஆட்சிக்கு முந்திய வரலாறு பெரும்பாலும் புகைபடந்த நிலையிலேயே காணப்படுகிறது. அண்மையில் நெடுந்தீவு லட்மணன் அவர்கள் எழுதிய சிதைவுறும் சின்னங்கள் என்ற நுர்லின் கையெழுத்துப் பிரதியை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது நெடுந்தீவு பற்றிய வரலாற்று நூல் என்பதை விட நெடுந்தீவு பற்றிய பன்முகத் தன்மையுடன் எழுதப்பட்ட அரிய கலைக் களஞ்சியம் என்று கூடக் கூறலாம். அதில் சிதைவுறும் சின்னங்கள் என்ற தலைப்பில் அவர் ஆதங்கத்துடன் கூறும் விபரங்கள் நெடுந்தீவை பார்வையிட வேண்டும் என்ற ஆவலைத்தூண்டியது. அதன் விளைவே கடந்த வாரம் தொல்லியல் வரலாற்று மாணவர்களுடன் சென்று கள ஆய்வில் ஈடுபடக் காரணமாகியது. ஆங்கு பார்த்தைவையும், கேட்டவையும் இற்றைக்கு முந்நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசின் தலைநகராக இருந்த நல்லூரின் பழைமையை அறியத் தொல்லியல் ஆதாரங்கள் இல்லையே என ஏங்கிய எமக்கு நெடுந்தீவில் பார்வயிட்ட தொல்லியற் சின்னங்கள் ஒரு வரலாற்றுப் பழமைவாய்ந்த தொல்லியற் கூற்றுலா மையங்களை பார்த்தது போன்ற திருப்தியை அளித்தது. அவற்றில் சிலவற்றையாவது பொதுக்கள் மத்தியில் பதிவு செய்ய வேண்டும் என்பது கள ஆய்வில் ஈடுப்பட்ட மாணவர்களின் விருப்பமாகும்..

எட்டுக் கீலோமீற்றர் நீளமும், ஆறு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட நெடுந்தீவின் பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் சமகாலத்தில் ஏற்பட்டு வரும் துரித அபிவிருத்திகள் ஒரு நகரத்திற்குரிய வளர்ச்சியை நோக்கி அத்தீவு செல்வதான பிரமிப்பை ஏற்படுத்தியது. ஆயினும் தற்போது ஏறத்தாழ ஆறாயிரம் மக்கள் குறிப்பிட்ட சில வட்டாரங்களில் செறிவாக வாழ்ந்து வரும் நிலையில் பல நூறு ஆண்டுகளாக பயன்படுத்தாத தரிசு நிலங்களைச் சிறு சிறு துண்டுகளாகக் கல்வேலி கொண்டு எல்லையிடப்பட்டிருப்பாதைப் பார்க்கும் போது அவை முன்பொரு காலத்தில் மக்கள் வாழ்ந்த இடங்கள் என்பதற்கு சாட்சியம் கூறுவதாக உள்ளன. ஆகவே அத்தகைய தரிசு நிலங்கள் பலவற்றில் அத்தீவின் பாரம்பரிய வரலாற்றைப் பறைசாற்றும் தொல்லியற் சின்னங்கள் காணப்பட்டமை எமக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை.



### பூர்வீக மக்கள்

குடாநாட்டில் மனித வரலாற்றின் தொடக்கம் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு உட்பட்டதென்பதை கந்தரோடையில் பென்சில்வேனிப் பல்கலைக்கழக அரும்பொருள் அகழ்வாய்வுக் குழுவினர் கண்டுபிடித்த தொல்லியற் சின்னங்களை நவீன காலக் கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்த தற்போது தெரிய வந்துள்ளது. அங்கு முதலில் வாழ்ந்த மக்களைத் தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடர் என்பது

மானிடவியலாளர்களின் பொதுவான கருத்தாகும். இம்மக்கள் குடாநாட்டின் ஏனைய இடங்களில் சமகாலத்திலோ அல்லது சற்றுக் காலம் தாழ்த்தியோ குடியேறி வாழ்ந்திருக்கலாம் என்பதை ஆனைக்கோட்டை, களபூமி, சாட்டி, பூநகரி, குடத்தனை, வெற்றிலைக்கேணி முதலான இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. இக்குடியேற்றங்கள் நெடுந்தீவிலும் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு நம்பத்தகுந்த பல ஆதாரங்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. அவற்றுள் நெடுந்தீவுக்கு வடமேற்கே கடற்கரையை அண்டிய வட்டாரத்தில் பரவலாகக் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பலவகைப்பட்ட மட்பாண்ட ஓடுகள், கீச்சுக்கிட்டான்கள் (ஐசழெ ளூடயஉமள) கைவிரல் அடையாளம் கொண்ட கூரை ஓடுகள் முதலானவை சான்றாக உள்ளன. இவ்விடங்களில் சீன நாட்டு மட்பாண்ட ஓடுகள் சிலவும் கிடைத்திருப்பது பதினோரம் நூற்றாண்டில் நெடுந்தீவுக்கும் சீனாவுக்கு இடையே கடல் வாணிப உறுவுகள் இருந்ததற்குச் சான்றாக உள்ளது.. எதிர்காலத்தில் இங்கு முறையான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படுமானால் நெடுந்தீவின் ப??ர்வீக குடிமக்கள் யார் என்ற உண்மை வரலாற்று வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை.

## வெடியரசன் கோட்டையா? பௌத்த தூபிகளா?

நெடுந்தீவிவு செல்வோரைப் பெரிதும் கவர்ந்திழுக்கும் முக்கிய அம்சம் அத்தீவின் வடமேற்கே கடற்கரைப் பகுதியில் தற்போது உயர்ந்த மேடுகளாகக் காட்சியளிக்கும் கட்டிட அழிபாடுகளின் சிதைவுகளாகும். இத்தீவின் வரலாற்றோடு வெடியரசன் வரலாறு இணைத்துப் பேசப்படுவதால் இக்கட்டிட அழிபாடுகளை மக்கள் வெடியரசன் கோட்டையென்றே அழைத்து வருகின்றனர். ஆனால் அக்கட்டடங்களின் அத்திவாரங்களையும், அதனோடு சிதைவுண்டு காணப்படும் கலைவடிவங்களையும் உற்று நோக்கும் போது அவை கிறிஸ்தவ சகாப்பத காலத்தில் தோன்றிய பௌத்த தூபிகள் எனக் கூறுவதே பொருத்தமாகும். மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தம் ஆசிய மதங்களில் முக்கிய மதங்களில் ஒன்றாக எழுச்சி பெற்ற போது அதன் செல்வாக்கு தமிழகத்திலும், இலங்கையிலும் புதிய மாறுதல்களை ஏற்படுத்தியது. இலங்கைக்குப் பௌத்தம் மௌரியத் தலைநகரில் இருந்து உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டாலும் அது தொடர்ந்து வளர்வதற்கு ஆந்திராவும், தமிழகமுமே முக்கிய காரணமாகும். இலங்கைக்கு மகாயான பௌத்தம் சோழ நாட்டு மகிந்தனால் பரப்பப்பட்டதுடன் தமிழகப் பிக்குகளான புத்ததத்த, தருமபாலர், வச்சிரபோதி போன்ற தமிழ் பிக்குகளே இலங்கையில் பாளி இலக்கியங்களுக்கு விளக்கவுரை எழுதவும் காரணமாக இருந்தனர். பௌத்த மதம் தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசியா முதலான நாடுகளில் பரவுவதற்கு வணிகத் தொடர்புகளே முக்கிய காரணமாக இருந்ததால் தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோரப் பகுதிகளைப் போல் வடஇலங்கையின் மேற்கு கடற்கரைப் பகுதியிலும் பௌத்த வழிபாட்டு ஆலயங்கள் தோன்றியிருக்க வேண்டும். இதையே வடஇலங்கையில் வல்லிபுரம், கந்தரோடை முதலான இடங்களில் உள்ள பௌத்த வழிபாட்டுச் சின்னங்கள் உறுதி செய்கின்றன. ஆயினும் இவ்விடங்களில் பௌத்த துறவிகள் வாழ்வதற்கு ஏற்ற இயற்கையான குகைகள், கற்படுக்கைகள் காணப்படாதததால் இலங்கையின் ஏனைய இடங்களைப் போல் இங்கு பௌத்தம் செல்வாக்குப் பெறவோ அல்லது பெரிய பௌத்த ஆலயங்கள் அமைக்கப்படுவதற்கோ சாதகமான சூழ்நிலைகள் இருக்கவில்லை. .மேலும் ஆறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய பத்தி இயக்கத்தால் பௌத்தம் வீழ்ச்சியடைந்து இந்து மதம் அங்கு மறமலர்ச்சி அடைந்த போது சமகாலத்தில் அதன் செல்வாக்கு எதிர்த்திசையில் அமைந்த வடஇலங்கையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியதால் இங்கு தமிழ்ப் பௌத்தம் தொடர்ந்து வளரமுடியவில்லை. இதையே நெடுந்தீவில் அழிவுண்டு காணப்படும் எச்சங்கள் உறுதி செய்கின்றன எனலாம்.



## புராதன இந்துக் கோவிலின் அழிபாடுகள்?

நெடுந்தீவின் வரலாற்றுப் பழமைவாய்ந்த இடங்களைத் தேடிப்பார்த்த போது எதிர்பாராத நிலையில் கல்வேலிகள் அமைக்கப்பட்ட இடத்திலிருந்து கிடைத்த இந்து ஆலயத்திற்குரிய இரு போதிகைகள் எமக்குப் புதிய கண்டுபிடிப்பாக அமைந்தது. இக்கல் வேலிகள் கடலில் இருந்து எடுக்கப்பட்ட கூலாங்கற்களைக் கொண்டு

அமைக்கப்பட்டிருந்தலாலும் இப்போதிகைகள் மட்டும் வைரமான கற்களில் அழகாகச் சிற்பங்கள் கொண்டு செதுக்கப்படடுள்ளமை இக்கற்கள் காணப்பட்ட இடத்தில் அல்லது கல்வேலிகள் அமைப்பதற்காக கற்கள் கொண்டுவரப்பட்ட இடத்தில் புராதன இந்து ஆலயம் இருந்திருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் கககாட்டுவதாக உள்ளது. எதிர்காலத்தில் விரிவான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமானால் இப்போதிகைகளுடன் தொடர்படைய ஆலயம் எங்கிருந்ததென்பதையும், அவற்றின் காலம், கலைமரபு எவை என்பதும் தெரிய வரலாம்.

**ஓல்லாந்தர் கால நினைவுச் சின்னங்கள்**

நெடுந்தீவின் வரலாறு வெளிச்சத்திற்கு வருவதற்கு ஐரோப்பியர் கால ஆட்சி முக்கிய காரணமாக அமைந்தது. அதிலும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண தென்னிந்திய வணிக உறவின் குறுக்கு நிலமாகவும், தொடக்கவாயிலாக நெடுந்தீவு காணப்பட்டதால் அவர்களின் இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் கேந்திர மையங்களில் ஒன்றாக இத்தீவு விளங்கியது. அவற்றை நினைவுபடுத்தும் வகையில் கிறிஸ்தவ தேவாலயங்கள், நிர்வாகக் கட்டடங்கள், கடற்கரைப் பாதுகாப்பு அரண்கள் வெளிச்ச வீடுகள், இறந்த இராணுவ மற்றும் உயர் அதிகாரிகளுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் என்பன காணப்படுகின்றன. அதற்கு உதாரணமாக அங்குள்ள ஒரு சில நினைவுச் சின்னங்களைக் குறிப்பிடலாம்.

**ஓல்லாந்தர் காலக் கோட்டை?**

நெடுந்தீவு மத்தியில் தற்போதைய வைத்தியசாலைக்கு கிழக்கே பயன்படுத்த முடியாத நிலையில் மிகப் பழமை வாய்ந்த கட்டிடத் தொகுதிகள் சிதைவுண்டு காணப்படுகிறன. யாழ்ப்பாணத்திலும், ஊர்காவற்றுறையிலும் உள்ள கோட்டைகளை அடுத்து ஒல்லாந்தர் காலத்திற்குரிய இன்னொரு முக்கிய நினைவுச் சின்னமாக இக்கட்டிடத் தொகுதியைக் குறிப்பிடலாம். இக்கட்டிடத் தொகுதிகளை அங்குள்ள மக்களில் ஒரு பிரிவினர் வெடியரசன் கோட்டை எனவும் இன்னொரு சாரார் ஒல்லாந்த கோட்டை எனவும் அழைத்து வருகின்றனர். ஆனால் ஒல்லாந்தர் கால ஆவணங்களில் நெடுந்தீவில் ஒரு கோட்டை கட்டப்பட்டதற்கான எந்தக் குறிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. கடற்கரையை அண்டிக்காணப்படும் இக்கட்டிடத் தொகுதியின் அமைப்பபையும், ஒல்லாந்தர் காலக் கலைமரபைப் பிரதிபலிக்கும் அவற்றின் மாடங்களையும், முகப்புத் தோற்றத்தையும் நோக்கும் போது அதன் மேற்குப்பக்க கட்டிடத் தொகுதி அவர்களின் நிர்வாக மையமாகவும், கடற்கரை நோக்கிய அதன் கிழக்குப் பக்க கட்டிடத் தொகுதி கடற்பாதுகாப்பு அரணாகவும் இருந்ததெனக் கூறுவதே பொருத்மாகும். அவற்றை உறுதிப்படுத்தும் வகையில் கட்டிடத்தின் கிழக்குப் பக்கத்தில் கண்காணிப்பு நிலையங்கள் இருந்தற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதன் நோக்கம் கடல் வழியாக வரக்கூடிய ஆபத்துக்களைக் கண்காணிப்பதாக இருக்கலாம். இரு மடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கட்டிடத் தொகுதி ஒல்லாந்தர் கால கட்டிடக் கலை மரபையும், அவர்களின் உயர்ந்த தொழில் நுட்பத்தையும் பார்ப்போரைப் பிரமிப்பூட்டும் வகையில் அமைந்து காணப்படுகிறது.



**பறவைகள் சரணாலயம்?**

இக்கட்டிடத் தொகுதிக்கு தெற்கே மிகக் கிட்டிய தொலைவில் ஒல்லாந்தர் காலத்தில் கட்டடிப்பட்டு பிற்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்பட்ட பறவைகள் தங்குவதற்கான மிக அழகான கட்டிடம் ஒன்று காணப்படுகிறது. ஏறத்தாழ 15 அடி உயரம் கொண்ட இக்கட்டித்தின் மேற்தளத்தில் 80 சிறிய அறைகள் கொண்ட பறவைகளுக்குரிய கூடுகள் காணப்படுகின்றன. அவை கூழாங்கற்களையும், சுதையையும், மரத்தையும் பயன்படுத்தி அமைக்கப்பட்டவையாகும். அக்கூடுகளின் அமைப்பைக் கொண்டு அதை புறாக்கூடு என மக்கள் அழைத்து

வருகின்றனர். ஆனால் அது அமைந்துள்ள இடத்தின் தன்மையையும், கட்டித்தின் கலை மரபையும், தொழில் நுட்பத் திறனையும், உற்று நோக்கும் போது இதன் நோக்கம் வேறுபட்டதாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. பொதுவாகப் பருவகால மாற்றம் நிகழும் போது பிற நாட்டுப் பறவைகள் இலங்கை வந்து சில காலம் தங்கிப் பருவ நிலை மாறியதன் பின்னர் தமது சொந்த நாடுகளுக்குத் திரும் செல்லும் வழக்கம் உண்டு. அவ்வாறு வந்து போகும் பறவைகளை நெடுந்தீவில் நிரந்தரமாகத் தங்க வைப்பதற்காக தமது நாட்டில் இருப்பது போன்ற பிறநாட்டுப் பறவைகள் தங்குவதற்காக இக்கூட்டை ஒல்லாந்தர் அமைத்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. எவ்வாறாயினும் இக்கட்டிடம் இலங்கையிலுள்ள மிக முக்கிய ஒல்லாந்தர் கால நினைவுச் சின்னங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை.

### குதிரைகளுக்கான லயன்கள்

நெடுந்தீவு செல்வோரை அதிக அளவில் கவரும் இன்னொரு முக்கிய நினைவுச் சின்னமாகவும், ஒரு சுற்றுலா மையமாகவும் காட்சியளிக்கும் இடம் நெடுந்தீவு மத்தியில் காணப்படும் குதிரைகளுக்கான லயன்களாகும். இலங்கைக்கு இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பிருந்து மேற்காசியாவில் இருந்தும், வடஇந்தியாவில் இருந்தும் குதிரைகள் கொண்டு வருப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண அரசு காலத்தில் இங்கிருந்து தென்னிந்தியாவுக்கு யானைகள் அனுப்பப்பட்டு அங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கும், அதற்குப் பதிலாக தென்னிந்தியாவிலிருந்து குதிரைகள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் ஒல்லாந்தர் ஆட்சியில் படை நடைவடிக்கைகளுக்கும், நிர்வாகத் தேவைகளுக்கும் குதிரைகள் பயன்படுத்தப்பட்டதால் அவற்றின் பாவனைகள் முன்னரைக் காட்டிலும் அதிகரித்திருந்தன எனக் கூறலாம். அதில் ஒல்லாந்தர் ஆட்சியில் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குதிரைகள் கொண்டுவரப்பட்ட போது அவற்றை வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் பொருத்தமான இடமாக நெடுந்தீவு இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அவற்றிற்காக ஒல்லாந்தர் ஆட்சியில் அமைக்கப்பட்ட குதிரை லயன்களே தற்போது அங்கு அழிவுண்ட நிலையில் காணப்படுகிறது. ஏறத்தாழ 300 மீற்றர் நீளத்திலும் 50 மீற்றர் அகலத்திலும் அமைக்கப்பட்ட இவ்லயன் பல குதிரைகளைப் பாரமரிக்கக் கூடிய இடவசதிகளைக் கொண்டிருப்பதுடன் அவற்றைப் பரமரிப்பதற்கான நிர்வாகக் கட்டிடமும் அதனுடன் இணைந்ததாக் காணப்படுகிறது. இக்கட்டிடப்பகுதி யொன்றே ஒல்லாநர் ஆட்சியில் நெடுந்தீவ எவ்வளவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீவாக இருந்ததென்பதற்குச் சாட்சியாக உள்ளது. அவர்கள் ஆட்சியில் முன்னிலை பெற்ற குதிரை வளர்ப்பு அவர்கள் ஆட்சி மறைந்தாலும் அவர்கள் கால நினைவுகள் இன்றும் மறையவில்லை என்பதை அங்கு பரவலாகக் காணப்படும் குதிரைகள் நினைவுபடுத்திக் கொண்டு இருக்கின்றன.



### பெருக்கு மரங்கள்

நெடுந்தீவில் காணப்படும் அதிசயப் பொருட்களில் ஒன்று அங்கு காணப்படும் பெருக்கு மரங்களாகும். ஒல்லாந்தர் ஆட்சியில் குதிரைகள் வளர்க்கப்பட்ட முக்கிய இடமாக நெடுந்தீவு காணப்பட்டதால் குதிரைகளின் உணவுக்காக இப்பெருக்கு மரங்களை ஒல்லாந்தர் தமது நாட்டிலிருந்து கொண்டு வந்து இங்கு அறிமுகப்படுத்தியதாகத் தெரிகிறது. இவ்வாறான மரங்கள் நெடுந்தீவை அடுத்து அவர்களின் ஆதிக்கம் நிலவிய மன்னர்க் கோட்டைப் பிரதேசத்திலும் இருப்பதாகத் தெரிறது. இம்மரங்களை அதிசயப் பொருளாகப் பார்ப்பதற்கு அது புதிய இனவகை மரங்கள் என்பது மட்டுமல்ல இலங்கையில் இதுபோன்ற பெரிய மரங்கள் இல்லை என்பதும் இன்னொரு முக்கிய காரணமாகும். இம்மரங்களின் அடிப்பாகத்தில் காணப்படும் குகை போன்ற வடிவம் பல மக்கள் பாதுகாப்பாக வாழவதற்குரிய இடவசதிகளைக் கொண்டிருப்பது பார்ப்போரை வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளது.

இதுவரை காலமும், வாய்மொழியாகவும், பிற்கால இலக்கியங்கள் ஊடாகவும் நெடுந்தீவுன் வரலாறு பற்றி அறிந்த தொல்லியல், வரலாற்று உணர்வுடைய மாணவர்கள் அவற்றை நேரில்பார்வையிட்டு உண்மைகளைப் புரிந்து கொண்டமை மகிழ்ச்சிகரமாக அமைந்தது. அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த துணைவேந்தரையும், கலைப்பீடாதிபதியையும் பல்கலைக்கழக நிர்வாகத்தையும் நன்றியோடு நினைவுபடுத்திக் கொண்டனர்.

# குழந்தை வளர்ப்பில் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள் - ஓர் ஆய்வு

**மருத்துவ கலாநிதி சே.சிவசண்முகராஜா B.S.M.S (S.L.) M.D (s) (India)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

தமிழ்ச் சமூகத்தில் குழந்தை வளர்ப்பில் காலங்காலமாகச் சில பழக்கவழக்கங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் பல குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்கும் ஏற்பட்ட நோய்களை தீர்ப்பதற்கும் அதன் மூலம் குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. படிக்காதவர்கள், படித்தவர்கள், வசதி குறைந்தவர்கள், வருமான வசதியுள்ளவர்கள் என்ற பேதமின்றி பலதரப்பட்டவர்களும் இவ்வித பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வருகிறார்கள் என்பதைக் கட்டுரையாசிரியரின் மேற்பார்வையில் யாழ்.பல்கலைக்கழகச் சித்தமருத்துவப் பிரிவு குழந்தை மருத்துவப் பகுதியால் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

துடக்கு என்று கூறி குழந்தையைக் கண்டபடி பிறர் தொடாமல் வைத்திருத்தல், திருஷ்டிப்பொட்டு வைத்தல், 'காத்துக் கறுப்பு பட்டு விடும்', தோஷம் ஏற்பட்டு விடும் என்று கூறி அந்தி, சந்தி வேளைகளில் குழந்தையை வெளியே கொண்டு செல்வதைத் தவிர்த்தல், கண்ணூறு, நாவூறு கழித்தல், கையில் வசம்பு கட்டுதல், தொட்டிலில் இரும்புத் துண்டைப் போட்டு வைத்தல், மூலிகை இலைகளைப் போட்டு பிசைந்த நீரில் குழந்தையைக் குளிக்க முழுக வார்த்தல், சாம்பிராணிப் புகை காட்டுதல், காது குத்துதல், ஆறுமாதம் வரை தாய்ப்பால் மட்டும் கொடுத்தல், பால் பருக்குதல் என்ற சடங்கின் பின்னரே துணையுணவுகள் கொடுக்க ஆரம்பித்தல், கிரந்தி எண்ணெய், நல்லெண்ணெய் வைத்தல், அக்கிக்குச் சிங்கம் கீறுவித்தல், உண்ணாக்கு வளர்ச்சிக்கு உச்சிமயிரைப் பிடித்து இழுத்தல், அம்மைநோய்க்கு வேப்பிலை கட்டுதல் என்பன குழந்தை வளர்ப்பில் நம்பிக்கையுடன் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சில பழக்கவழக்கங்கள் குறித்து கட்டுரையாசிரியர் ஆராய்ந்துள்ளார்.



# போருக்கு பிந்திய யாழ்ப்பாணச் சூழலில் ஹோர்ஹமரினுடைய சிந்தனை - ஓர் மீள்பார்வை

**ந.சிவகரன்,**
**விரிவுரையாளர்,**
**மெய்யியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**

இக் கட்டுரையானது இலங்கையின் 30 ஆண்டுக்கால ஆயுத மோதலுக்கு பிற்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் மற்றும் வாழ்க்கை முறைமைகளினை யேர்மனியின் பிராங்பேட் சிந்தனைப் பள்ளியின் அங்கத்தவரான ஹோர்ஹைமரினுடைய சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டு விமர்சன நோக்கில் ஆய்வு செய்ய முனைகின்றது. அதாவது சமகால யாழ்ப்பாண சமூகத்தில் இழையோடிக் காணப்படும் பல்வேறுப்பட்ட பிரச்சினைகளுக்கு, பகுத்தறிவான விமர்சனத்தின் மூலம் தான் மாற்றத்தின் வளர்ச்சிப் படி நோக்கி இட்டுச் செல்ல முடியும் என்பது இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

கலாசாரத்திலும் பண்பாட்டிலும் அரசியலிலும் ஒதுக்கப்பட்ட விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ள யாழ்ப்பாணச் சமூகத்தை பகுத்தறிவுடன் கூடிய சிந்தனைச் சமூகமாக மாற்றுவதற்கு அனைவரும் முன் வர வேண்டும் என்பதனை இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது.

இக்கட்டுரையானது பகுப்பாய்வு முறையியல், ஒப்பீட்டு முறையியல், வரலாற்று முறையியல் என்பவற்றின் துணைகொண்டு வடிவமைக்கப்படுவதுடன் இக் கட்டுரைக்கு வேண்டிய தரவுகளானவை முதல் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத் தரவுளினூடாக பெறப்பட்டது. முதல் நிலைத் தரவுகளான கட்டுரையாளனால் நேரடியாக அவதானிக்கப்பட்ட விடயங்களுடனும் சமூக ஆர்வலர்களுடனான கலந்துரையாடல் மூலமாகவும் பெறப்பட்டவை. இரண்டாம் நிலைத்தரவுகளானவை ஹோர்ஹைமருடைய நூல்களினூடாகவும் இவ் ஆய்வுடன் தொடர்புடைய சில சமூக நிறுவனங்களின் தரவுகள் மற்றும் உள்ளூர் பத்திரிகைக் கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டுள்ளது.



# தமிழ் இனத்துவ இசை வரலாறு இலங்கை தளமாகக் கொண்ட பார்வை அறிமுகம்

திருமதி சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர், இசைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

மனிதன் இயற்கையின் ஒரு அலகு. இயற்கை, அழகியலம்சங்களின் கூட்டிணைவால் ஆனது. எனவே மனிதனும் அழகியல் அலகுகளின் அதிகாரங்களுக்கு உட்பட்ட ஒருவனாகின்றான். அதே வேளையில் தனியான்களது கூட்டமைவே சமூகம் அல்லது இனம். இந்த வகையிலே இனத்தின் அல்லது சமூகத்தின் கூட்டமைவிலே அழகியல் முக்கியம் பெறுவது தவிர்க்க முடியாததாகின்றது. அழகியல் மனிதனை மானுடத்துவத்தோடு ஒன்று சேர்த்து முழு மனிதனாக்குகிறது. இந்நிலையிலே சமூகப் பண்பாட்டுக் கூறுகளுள் இசை ஒரு பிரதான இடத்தினை பெறுகின்றது.

உலகப் பண்பாட்டியல் நிலைகளிலே வாழ்கின்ற இனக்குழுமங்கள் ஒவ்வொன்றும் தமக்குரிய மரபுகள் விழுமியங்களுக்கு ஏற்ப தமது இசை மரபுகளை வடிவமைத்துக் கொள்கின்றன. ஒவ்வொரு இசைமரபும் தாம் வாழும் சமூகவியல் பண்பாட்டியல் விழுமியங்களின் நெறிமுறைகளுக்கேற்ப வடிவமைக்கப்படுகின்றன.

சர்வதேச மரபாக இசையானது சமூகவழக்கிலிருப்பினும் ஈழத்தில் தமிழ் சமூகத்தின் மத்தியில் இதன் இருப்பு என்ன, காலத்திற்குக் காலம் இந்த சமூக மூலக்கூறாக விளங்கும் இசையானது எவ்வாறு தமிழினத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றது, தமிழ் சமூகத்திலே இந்த கூலக்கூறு பெற்றுக்கொண்டுள்ள இடம் என்பவை பற்றிக் கண்டறிவதாகவே இந்தக்கட்டுரை அமைகின்றது.

### 1.1 இலங்கையின் இனத்துவக் குழுக்கள்

இலங்கையில் தமிழ்பேசி இந்துப்பண்பாட்டு மரபுகளை பின்பற்றுவோர் தமிழர் என்றும், சிங்களத்தை தாய்மொழியாகக் கொண்டு பௌத்த பண்பாட்டு மரபுகளை கடைப்பிடித்போர் சிங்களவர் என்றும், தமிழ் பேசி அல்லாவை வணங்கி இஸ்லாம் பண்பாட்டிற்குரியவர்கள் முஸ்லிம்கள் என்றும், கிறிஸ்வத மதத்தைப் பின்பற்றி மேல்நாட்டு மரபுகளோடு வாழ்பவர்கள் பறங்கியர் என்றம் அடையாளம் காணப்பட்டனர்.

இலங்கையின் பூகோள அமைப்பிலே வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழரும், ஏனைய பகுதிகளில் சிங்களவரும் பெரும்பாலும் வாழ்ந்தனர். முஸ்லிம்களும் கூடுதலாக வடபுலமே ஒதுங்கினர். இடையில் தவிர்க்கமுடியாததாகிப்போன சில காலசூழ்நிலை மாற்றங்களின் பின்னர் மீண்டும் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தை தமிழர்கள் முஸ்லிம்கள் வாழும் இடமாகக் கொள்ளலாம்.

### 1.2 இனத்துவ அடையாளங்கள்

ஒவ்வொரு இனமும் தனக்கென ஒரு பண்பாட்டு அமைப்பியலைக் கொண்டிருக்கும் இது அந்த இனத்தவரால் ஏற்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட நியம, விழுமிய, வழக்காறுகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்படும். ஒரு இனத்துக்குரிய பண்பாட்டுக் கூறுகள் அந்த இனத்தவரால் அங்கீகாரம் பெற்றனவாயிருத்தல் அவசியம்.



இந்த இனங்களுக்குரிய அடையாளங்கள் பண்பாட்டு கூறுகளை வேறுபடுத்திப் பார்ப்பதில் இருந்து புரிந்து கொள்ள முடியும். இந்த பண்பாட்டுப் பொதுக் கூறுகளுள் எல்லா இனத்திற்குமுரிய இசை

என்கின்ற அழகியல் வடிவத்தின் ஆதிக்கத்தையும், அதே நேரம் அதன் வேறுபட்ட தன்மை இனத்துவ அடையாளத்தையும் வெளிப்படுத்துகின்றன.

### 1.2.1 சமயமும் இசையும்

சமயம் என்பது ஒரு இனத்தின் முக்கியமான பண்பாட்டு மூலக்கூறாகும். சிங்கள இனத்தைப் பொறுத்தவரையிலே பௌத்தம் இவர்களால் பின்பற்றப்படுகிறது. பௌத்தமத கொள்கைகள் கலை, கட்டிட நிர்மாணம் என்பவற்றை மட்டுமல்லாது இசையையும் நடனத்தையும் பற்றிச் சிந்தித்து, வளர்த்தது.

கி.பி 236 அளவிலே வட இந்திய ஆரியர்களது ஆதிக்கம் இங்கு அசோகன் காலத்தில் பௌத்தத்தில் நுழைந்துகொண்டது. பௌத்தமதம் அரச மதமாகப்பட்டது. அனுராதபுர நகரம் பௌத்தமத வளர்ச்சியின் போது மிகவும் சிறப்பாக சேவைபுரிந்தது. இக்காலத்தில் பெரிய ஸ்தூபிகள் எழுப்பப்பட்டதுடன் இசையும் முக்கியப்படுத்தப்பட்டது.

'பன்கட்டுர்யா' (Pancaturya) என்ற இசைமரபு பௌத்த சடங்குகளிலே சமாதானத்துக்காக இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த இசை பௌத்த தேவாலயங்களில் இசைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் இலங்கையில் அனுராதபுரக் காலத்தில் ஹீனயான பௌத்தமே மரபிலிருந்தது. பின்னர் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக சீனா, யாவா, சுமாத்திரா, பேர்சினன், அராபிய கப்பல்கள் வர்த்தகம் தொடர்பாக வந்து போய்க்கொண்டிருந்தன. இதே நேரம் இலங்கை ஏனைய பண்பாடுகளினது நுழைவுக்கு ஒரு திறந்த நுழைவாயிலாக இருந்தது.

இந்நிலையிலே அனுராதபுரத்தின் ஆட்சிக்காலத்திலேயே மஹாயான பௌத்தம் என்ன மற்றோர் சமயப்பிரிவு கூறுகளும் புகுந்து கொண்டன. அநேக அரசர்கள் இதற்கு நல்லாதரவளித்தனர். இக்காலங்களில்தான் பிரித் ஓதுவது என்பது ஒரு பௌத்த சடங்கு நிலையிலே முக்கியமான ஒன்றாகத் தொடங்கியது.

இங்கு பிரித் ஓதுவது என்பது பற்றி நோக்கும் போது அதனை ஓதுவதற்குப் பல வடிவங்களுண்டு ஆயினும் பாரித்தா (Paritta) என்ற ஓதல் வடிவம் சிங்கள கிராமிய பாடல்களின் இசை வடிவங்களின் ஆதிக்கம் பெற்றவையாகவே காணப்படுகின்றன. இதேநேரம் பிரார்த்தனை ஓதுதல்களின் (Congregational chart) மொழிப்பெயர்ப்புக்களின் சில பகுதிகள் சாமவேத பாடல்களோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது. சாமவேத பாடல்கள் சரியான இசை வரன்முறைக்குட்படுத்தப்பட்டுப் பாடப்படுவதில்லை. இசைநயம் இங்கு இருக்கவில்லை. ஆதார சுரம் ஒன்றை முதலில் அமைத்துக் கொள்ளாமலும் சரியான இசைக்கணக்கு முறைகளின் சுரங்களின் இடைவெளி அமைப்பின்றி அவரவர் விரும்பியவாறு பாடப்பட்டதுதான் சாமகானம். இசையற்ற முறையில் பாடம் ஒப்பிப்பதுபோலப் பாடப்பட்டது என்று கூறப்படுகிறது. இதே நிலையை இன்றைய பௌத்த மதத்தில் பிரித் ஓதலில் புரிந்துகொள்ள முடியும். ஒரு சில சிறிய ஏற்ற இறக்கங்களோடு தேரர்கள் பாடுவதைக் கேட்கமுடிகிறது. சிங்கள மரபிற்கும் அதாவது பௌத்த பண்பாட்டு மரபுகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் நெருங்கிய உறவு இருக்கிறது என்பது வரலாற்று ஆதாரம்.

இவ்வாறே இந்து சமய மரபைக் கொண்ட தமிழ் இன இசை மரபை நோக்கின் 'பண்ணிசை' இவர்களுக்குரிய மத இசை வடிவமாக்கப்பட்டிருந்தது. இதற்கு தென்னிந்திய சோழ பாண்டிய மன்னர் காலத்தில் மிகவும் செழிப்பானதாகக் காணப்பட்டது. இலங்கையில் பராக்கிரமபாகு பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தபோது இவன் இந்துப் பண்பாட்டின் வாழ்க்கை முறையைப் பின்பற்றினான். பிராமண குருமார்கள் அரசவையில் பல இந்துச் சடங்குகளுக்காகக் கலந்துகொண்டனர். இதனுடன் இணைந்து பண்ணிசையும் வளர்ந்தது.



தமிழ் இனத்தின் பண்ணிசை மரபானது மிகவும் ஆழமானதும், நுணுக்கமானதுமாகும். தென்னிந்தியாவிலே பண்னிசை மிகவும் செழிப்புடன் வழக்கிலிருந்து வருகின்றது. இதன் பரவுகை இலங்கையிலும் நுழைந்தது. இன்றும் கோயில்களிலும் சடங்குகளிலும்

தேவாரம் பாடுவது முக்கியமான ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது. கோயில்களில் பெரும்பாலும் தேவாரம் பாடுவதற்கென ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இவர் ஓதுவார் என அழைக்கப்படுகிறார். இன்று சில இடங்களிலே இது பரம்பரையாகவே பாடப்பட்டு வருகிறது.

18ம் நூற்றாண்டின் இறுதியில் (1796) இலங்கை பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்தது. இக்கால கட்டத்திலே இந்துக்கலைகள் சிறிது சிறிதாக மீண்டும் புத்துயிர் பெறத்தொடங்கின. 1790ல் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் வைத்திலிங்கச் செட்டியாரால் கட்டப்பட்டது. பின்னர் இவ்வாலயத்தில் இசைப்பதற்கென இந்தியாவிலிருந்து நாதஸ்வர தவில் வித்துவான்கள் அழைக்கப்பட்டு அதன்சுற்றுப்புறங்களிலே குடியேற்றப்பட்டனர். ஆறுமுகநாவலர் இந்தியாவிலிருந்து ஓதுவார்களை அழைத்து தேவாரங்களைப் பண்முறைப்படி ஓதுவித்தும் இங்குள்ள ஆர்வலருக்குப் பயிற்றுவித்தும் வந்தார். இக்கலைஞர்கள் வண்ணார்பண்ணை, நீராவியடி, வடக்கம்பராய், மந்துவில், கைதடி, காரைதீவு ஆகிய இடங்களில் தங்கியிருந்தனர்.

இவை தவிர ஈழத்துத் தமிழ்மரபில் இதிகாச புராணங்கள் பாடுகின்ற கதாகாலேட்சபமரபுகள் வில்லுப்பாட்டுமரபுகளும் குறிப்பிடவேண்டியவை. ஆறுமுகநாவலராலும் இவரது மருகர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, கொக்குவில் குமாரசாமிப்புலவர் போன்றோராலும் புராணபடனம் வளர்க்கப்பட்டது. இன்னும் தமிழ் சமூகத்தின் பண்பாட்டடையாளங்களைக் கட்டிக்காத்து வரத் தவறவில்லை. இது தவிர கதாகாலேட்சபமும் ஈழத்தில் தமிழ்ப்பண்பாட்டினைக் கட்டிக்கத்துவந்த சமூக மூலங்களுள் முக்கியமான ஒன்று என்றே கொள்ளலாம். சேகர சுப்பையா சுவாமிகள், சங்கானை நாகலிங்கப்பரதேசியார், மாணிக்கத்தியாகராஜர், நல்லைக்குருமணி சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் போன்றோர் இதன் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவராகக் கொள்ளலாம்.

இதுபோல் இஸ்லாமிய பண்பாட்டைக் கடைப்பித்து வாழுகின்ற முஸ்லிம் இனத்தவர் தமிழ்மொழியைப் பேசுகிறார்கள். இவர்களது வழிபாட்டிலும் இசை முக்கியம் பெறுகிறது. 'பாங்' ஓதுவது இவர்களுக்கு முக்கியமான ஒன்று பாடல்வரிகள் தமிழில் இருந்தாலும் அரேபிய இசையின் வடிவங்கள் சில இங்கு கைக்கொள்ளப்படுகின்றது. அவர்களுக்கேயுரிய அசைவுகள் இவர்களை இனங்காட்டி நிற்கிறன.

தேவாலயப் பாடல்கள், தேவாலய இசை வடிவங்கள் பறங்கியரது சமயத்திலே வழிபாட்டிலே முக்கிய இடம் பெறுகிறது. இது மேலைநாட்டு இசை மரபுகள் ஆங்கில இசைமரபுகளோடு ஒத்தே காணப்படுகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு சமூகமும் தமது சமய மரபியல்களை இசையினூடாக வளம்படுத்தவும் தம் சமூகஅடையாளத்தினைப் பலப்படுத்தவும் தவறவில்லை.

### 1.2.2 குடும்பமும் இசையும்

இங்கு குடும்பம் என்பது ஒவ்வொருவரதும் ஆரம்ப வாழ்க்கைக்களம். ஒருவன் பிறந்தது முதல் வாழ்வுக்காலம்வரை ஏதோ ஒருவகையில் குடும்பத்துடன் இணைந்தவனாகிறான். இந்த குடும்ப நிலைகளோடு பாடல் வடிவங்களும் இணைந்திருக்கின்றன.

சிங்கள இனமரபினை நோக்கும்போது தமிழ் இனமரபில் தாய் குழந்தையைத் தாலாட்டுவதுபோல பாடல்களை அவர்களும் பாடுகிறார்கள். இது 'லலபைஸ்' எனப்படுகிறது. இதன் சிறந்த பாடல்கள் இன்றும் மொனராகல மாவட்டத்தில் சிறப்பாகக் கேட்கமுடிகிறது. இதன் ஆரம்ப மரபியல் வடிவம் வேடர்களிடம் வழக்கில் இருக்கிறது.

ஒவ்வொருவனும் தன் வாழ்க்கைப் பருவ நிலைகளின் உணர்ச்சிகளுக்கேற்ப இசையினைப் பிறப்பிக்கின்றான். இளம்நிலைப் பருவத்திலே அவர்களது உள நிலைகளுக்கேற்ப தமிழிலே நிறையப் பாடல்களைக் கேட்கிறோம். கும்மி, காவடி, ஊஞ்சல், அம்மானை, வஸந்தன் எனப்பலவும் உண்டு. 'ஒஞ்சில்' (Onsili) எனப்படுகின்ற பாடல்கள்



ஊஞ்சல் ஆடும்போது பாடப்படுபவை. இங்கு தமிழிலே ஊஞ்சல் என்று சொல்வதுதான் 'ஓஞ்சில்' என்ற மருவி இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த ஊஞ்சல் என்பது சமய மரபுகளிலே முதன்மை பெறுவது. இந்துக் கோயில்களிலே வருடாந்த உற்சவங்களின்போது தெய்வங்களை ஊஞ்சலாட்டுவது ஒரு சமய மரபாகும். சிங்கள மரபில் இந்த இசைவடிவத்தை இன்றும் ஹோறனா (Horana) பிரதேசத்தில் பசுமை மாறாது கரிசிக்க முடியும்.

தமிழ் மரபு வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும்பாடல்கள் இணைக்கப்பட்டு இருக்கும். திருமணத்திற்கான நலங்கு, லாலி, பாடல்கள் இறப்பு நிலையிலே ஒப்பாரி என வாழ்வியலோடு இசை பிணைந்து நிற்கிறது.

## 1.3 இலங்கைத் தமிழ் இனத்துக்குரிய இசையியல் மரபாளுமைகள்

### 1.3.1 கிராமிய இசை வடிவங்கள்

இது மக்களால் ஆக்கம் பெற்று பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் இம்மரபு இவர் களது இன்ப துன்பங்கள், தொழில் முறைகள், வாழ்க்கை நடைமுறைகள், நம்பிக்கைகள் முத லானவற்றைப் பின்னணியாகக் கொண்டவை.

இது வாழ்க்கை வட்ட பருவங்களிலே அவர்களது உள்ளத்து உணர்ச்சிகளுக்கேற்ப விளையாட்டுப் பாடல்கள், ஊஞ்சல் பாட்டு, காவடிப்பாட்டு, கும்மிப்பாட்டு என்றும், தொழில் தளங்களிலே தொழில்புரிவோரின் உணர்வெழுச்சிகளுக்கு ஏற்ப தொழிற் பாடல்கள் என்றும், பருவகால சடங்குகளில் பாடப்படவேண்டிய பாடல்கள் என்றும் தமிழ் மரபில் இருந்து வருகின்றன.

இந்த கிராமியப் பாடல்கள் இசை நுணுக்கங்கள் எதுவுமே பாராது அக்கணத்தின் உணர்வை தளத்தை தெளிவாக இனங்காட்டுவது.

இவை தவிர இசையின் குறியீடுகளாக (Symbols) இசைக்கருவிகள் காணப்படு கின்றன. கிராமியத் தளங்களிலே அவ்வத் தளங்களின் சூழ்நிலைகளுக்கும் பண்பாட்டு நிலை களுக்கேற்பவும் கருவிகள் தோற்றம் பெற்றுத் தொழிற்படுகின்றன.

உடுக்கு தமிழ் இனத்தின் உயிரோட்டமான கருவியாக வழங்கப்பட்டிருந்தது. அதிமாகிட, மானுட தொடர்பை உடுக்கின் ஒலி ஏற்படுத்துகின்றது என்று களநிலைத் தரவுகள் குறிப்பிடுகின்றன. கோயில் வழிபாடுகளின்போது குறிப்பாக வயிரவன், முருகன், அம்மன் கோயில்களில் இது சிறப்பாக இயக்கப்பட்டு வருவதாக தரவு மாதிரிகள் குறிப்பிட்டு இருக்கின் றனர். மேலும் இன்றும் கிராமங்களிலே பேயாட்டல், அம்மன் குளிர்த்தி, மத்திரங்களோடு கூடிய சடங்குகள் என்பன போன்ற சடங்குகளிலும் உடுக்கு உணர்வுள்ள கருவியாக தொழிற் படுவதாகக் கள விபரங்கள் குறிப்பிடுகின்றது.

மற்றும் பறை என்பது தமிழர் வரலாறோடு சேர்ந்து வளர்ந்து வந்தது. இன்று இன்னும் அழிந்துவிடாது சில கோயில்களில் சடங்குகளின்போதும், ஈமைச் சடங்கினைக் குறிக்கின்ற குறியீடாக இன்று பறை வழக்கிலிருந்து வருகிறது.



தவில், நாதஸ்வரம் அண்மைக்காலங்களிலே இலங்கைத் தமிழரிடையே இசை வேளாளர் சமூகத்தின் வரவோடு புகுந்துகொண்டவை. மங்கலத்தின் வெளிப்பாடாய் இன்றும் கோயில்களிலும், உற்சவங்களிலும் திருமணங்களிலும் சடங்குநிலைக் குறியீடாக வழக்கிலி ருந்து வருகிறது.

### 1.3.2 சாஸ்த்திரீய இசை வடிவம்

இலங்கைத் தமிழினம் கர்நாடக இசையைத் தன் சாஸ்திரீய கலைவடிவமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இன்று எமது சமூகத்தில் கர்நாடகஇசை யானது மிகுந்த அந்தஸ்த்து வழங்கப்பட்டு வருகிறது. இன்று இசை ஒரு பண்பாட்டுப் பெறுமதியாகிவிட்ட நிலையைக் காணமுடிகிறது.

கர்நாடக இசை ஒரு பயில்நிலை அழகியல் வடிவமாக பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் போதிக்கப்படுகின்றன. பாடசாலை மட்டத்திலே மாணவர் தொகையில் 80மூ மானோர் இசை பயில்வதும், யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக பயில்நிலையினரது தொகையீடும் இதற்கு சிறந்த சான்றாதாரங்களாக அமைகின்றன.

20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளிலே தென்னிந்திய நாடகக் கம்பனிகள் இங்கு வந்து கலைகளைப் படைத்தனர். இவர்களது பாடல்கள் பெரிதும் கர்நாடக மரபையே ஒத்தனவாயிருந்தன. இவர்களது வருகை இலங்கை தமிழரிடையே கர்நாடக இசையை அறிமுகப்படுத்தியது. இந்த நாடகக் குழுக்களது செயற்பாட்டிலே சிறிது சிறிதாக தம்மை ஏற் படுத்திக் கொள்வதோடு கர்நாடக இசையும் புகுந்துகொண்டது.

முக்கியமான இசை வேளாள சமூகம் நாதஸ்வர தவில் வித்வான்கள் தென்னிந்தியாவி லிருந்து தொழில் முறையாக இங்கு வந்து போனதும் இங்கேயே தங்கியதும் கர்நாடக இசையின் ஊன்றுகோலுக்கு காரணமாயிருந்தது. இவ்வாறு கற்றுவந்த சமூகத்தினர் ஆலய சுற்றாடலில் குடியிருத்தப்பட்டனர். மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில், கோண்டாவில், சாவகச்சேரி, கைதடி, பருத்தித்துறை, மூளாய் போன்ற இடங்களிலே குடியமர்ந்தனர். இந்நிலையிலே குறித்த சில சமூகத்தினர் தென்னிந்தியா சென்று கர்நாடக இசை வடிவத்தையும் கற்று மீண்டனர். இந்தக் காலங்களில் தான் தென்னிந்தியாவில் 1935இல் அண்ணாமலை இசைப் பல்கலைக்கழக நிறுவனமும், 1941இல் தமிழிசைச் சங்கமும் நிறுவப்பட்டன. இங்கு இலங்கைத் தமிழர் சென்று கற்று மீண்டனர்.

இந்நிலையிலே கர்நாடக இசை தமிழ் இனத்தின் உள்வாங்கப்பட்ட நிலையில் பாடசாலைகளில் கற்கைநெறிகளாகவும் கொண்டுவரப்பட்டன. அதாவது எல்லா மக்களும் இதனைக் கற்றறிந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

பின்வந்த காலங்களில் அரசியல் நிலை மாற்றங்கள் எமது பண்பாட்டுக் கையிருப்புக்களை உறுதிசெய்துகொள்ள வேண்டிய நிலைமைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையிலே பண்பாட்டின் தனித்துவ வடிவமாய் விளங்கிய இசையிலே மாற்றங்கள் செய்யப் பட்டன. தமிழருடைய பண்பாட்டடையாளங்கள் பேணப்படுவருடன் வெளிக்காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதன்வழி ஆக்க இசைமரபுகள் முனைப்படைந்தன.

எமது படைப்புக்கள், எமக்குரிய பாடல்கள் என்கின்ற உணர்தலின் வெளிப்பாட்டின் விளைவாக வடிவம் பெற்றவைதான் இந்த ஆக்க இசைமரபு வடிவம். கர்நாடக இசையிலே மொழியினாலான சிக்கல் உண்டு. எனவே அதனூடாக தமிழ் இனத்துவ அடையாளம் செய்யப்படமுடியாத நிலையிலும் எமக்குரிய இசைவடிவமாக ஆக்க இசைவடிவம் வடிவம் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

### 1.3.3 மெல்லிசை வடிவம்

இலங்கைத் தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் மெல்லிசை மரபானது அவ்வப்போது செழிப்புள்ள ஆளுமைகளது முயற்சியால் குறிப்பிடத்தக்க வரலாற்றுப் போக்கினைக் கொண்டிருக்கிறது. எஸ்.கே.பரராஜசிங்கம், கலைஞர் இராசதுரை, எம்.எ.குலசீல நாதன், இ.முருகையன், என நீளும் ஆக்க கலைஞர்களுடன் பேராசிரியர் கைலாசபதி போன்ற அறிஞர்களின் ஈடுபாடும் ஈழத்து மெல்லிசை தனக்கென ஒரு வடிவம் பெற்றுவளர துணையாக அமைந்தது.



இது சாஸ்திரிய இசை வடிவத்தின் இலகுவான வெளிப்பாடாக அமைந்த அதேநேரம் ஆக்க கலைஞரினால் பாடல் வரி வடிக்கப்பட்டு இசைக்கலைஞரால் இசைவடிவாக்கப்பட்டு உயிர்ப்பூட்டப்பட்டது. இது இசை வடிவத்தைக் காக்கும் அதேநேரம் அவ்வப்போது சமூக நிலை மாற்றங்களை

வெளிப்படுத்துவதாயும் அமைந்திருந்தது.

அதாவது எங்கள் இசை, எங்கள் பாட்டு என்ற உணர்வு நிலையின் வெளிப்பாடே மெல்லிசை வடிவம். இதன் பின் அரசியலில் ஏற்பட்ட மாற்றநிலைகள் மெல்லிசை வடிவத்தை வேறு திசைக்குக் கொண்டுசென்றது. பாடுபொருள், உள்ளடக்கம் என்பன தேச விடுதலை, தியாகம், வீர உணர்வு என்கின்ற வகையிலே அமைந்திருக்கக் காணலாம்.

இந்தப் பாடல்களுக்கு புறம்பாக சமூக மாற்றக் கருப்பொருட்களுடன் கூடிய ஆக்க இசைப்பாடல் வடிவங்கள் சமூக யதார்த்தங்களை சுட்டிநின்றது.

இந்த ஆக்க இசைவடிவமானது செந்நெறி மரபான கர்நாடக இசை மரபை அடியொற்றி எழுந்த ஒரு சுலபமான இசைவடிவமாகும். இசை நுணுக்கங்களால் வரையறுக்கப்படாத எல்லோரும் ரசிக்கக் கூடிய வகையில் சுலபமான முறையில் வடிவமைக்கப்பட்டது. இந்த ஆக்க இசை வடிவம் வானொலியை ஊடகமாகக் கொண்டே தன் அடையாளத்தை வெளிப்படுத்தி நிற் கிறது.

அறுபதுகளிலே வானொலிக்கு வெளியே கொழும்பில் கலையரங்கு கண்ட சில ஈழத் துக் கவிஞர்களது பாடல் களங்கள்தான் ஈழத்து மெல்லிசைவடிவம் தோற்றம் பெற முக்கிய காரணமாயமைந்தது. இந்த வகையில் முருகையன், பரராஜசிங்கம், குலசீலநாதன் போன்ற ஆளுமைகளின் கலையரங்கப் படைப்புக்கள் இதற்கான முன்னோடிகளாயிருந்தன. வானொலியின் இசையிடையிட்ட சித்திரங்களிலும் இது பரிசோதிக்கப்பட்டன.

அறுபதின் இறுதிகளில் முகிழ்த்த இந்த இசைவடிவங்கள் எழுபதுகளில் ஈழத்துப் பாடல்கள் என்ற பெயரில் வானொலி நிகழ்ச்சிகளில் நிரந்தர இடம்பிடித்துக்கொண்டது.பரராஜசிங்கம், சில்லையூர் செல்வராஜன், விவியன் நமசிவாயம் போன்ற ஆளுமைகளின் ஆர்வங்கள் இதற்கு பக்கபலமாய் இருந்தன. இந்தக் காலப்பகுதிதான் ஈழத்துப் பாடல்களை அதன் தனித்துவங்களோடு வெளிப்படுத்தி நின்றதாக ஆனது.

பின் வந்த காலங்களில் தமிழர் பண்பாட்டுக்கூறுகளின் அடையாளங்கள் நவீனத்துவம் என்ற போர்வையிலே மறைய முயன்ற சமயம் ஆக்க இசை வடிவங்கள் ஆங்காங்கே களங்களை நிறுவி தமிழ் பண்பாட்டடையாளங்களை இனங்காட்டும் தேடல் நிலை களாக செயற்படத் தொடங்கின.

இதன் பின் வந்த காலங்களிலே தேசியம், விடுதலை என்கின்ற கருத்தியல்கள் அரசியல் நிலை மாற்றங்களினால் தமிழ் பண்பாட்டினுள் புகுந்து கொண்டன. 'மெல்லிசை' என்ற பாடல்வகையின் பாடுபொருள்களாய் தேசியம், இனத்துவம், விடுதலை என்பன அமைந்து கொண்டன. இக்காலங்களில் தமிழ் இனத்துக்குரிய இனத்துவ வெளிப்பாட்டு வடிவமாக எழுச்சிப் பாடல்கள் முனைப்படைந்தன.

தமிழினம் மத்தியில் வீர உணர்வும் தேசிய உணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. பண்பாட்டு அடையாளங்களை மீளுயிர்ப்புச் செய்யவேண்டிய அவசியம் எழுந்தது. இந்த சிந்தனை ஏனைய பண்பாட்டுக் கூறுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திய அதே வேளை இசைமரபிலும் ஏற்படுத்தியிருந்தது. இவை எழுச்சிப் பாடல்களாக வடிவம் பெற்றன.

கவிஞர் புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் போன்ற புரட்சிக் கவிஞர்களின் படைப்புகளும் ஏனைய புனைபெயர் கவிஞர்களது படைப்புகளும் பார்வதி, மேல்லின் எனப் பல உணவுபூர்வமான பாடல் ஆளுமைகளின் வழி பாடலாக்கப்பட்டன. பெரும் பாலான பாடல்கள் ஈழத்து மெல்லிசை ஆக்க இசை அமைப்பாளரான கண்ணனால் இசை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இன்றைய சமகாலத்தில் மேற்படி எழுச்சிப்பாடல்கள் அரசியல் மாற்றங்கள் காரணமாக யாழ்ப்பாணப் பண்பாட்டுப் புலங்களிலிருந்து மறைந்து கொள்ள ஆங்காங்கே ஆக்க இசைப்பாடல் நிகழ்வுகள் தமிழ் பண்பாட்டின் தனித்துவத்தை தக்கவைத்துக் கொண்டிருக் கின்றன.

இதனைத் தொடர்ந்து உலகளாவிய

நிலைகளிலும் பெரும்பாலும் ஒவ்வொரு இனமும் தன் உண்மை இசைவடிவங்களை மீளுயிர்ப்புச் செய்துகொள்ள முனைந்தன. இந்நிலையில் நாட்டார் இசைமரபு பற்றிய ஒரு கவனம் உலக பண்பாடுகளிடையே எழுந்தது.

நாட்டார் இசைமரபுகள்தான் ஒரு சமூகத்தின் உயிர். அவ்வினத்தின் பண்பாடு. பின்வந்த செந்நெறிக்கலை மரபுகளும் அவற்றின் உலகளாவிய நிலையிலே பண்பாட்டுக் கலப்புக்களும் (Culture Complex) இந்த நாட்டார் மரபுகளின் மண்வாசனை குலைத்தெறியும் வாய்ப்புக் களை ஏற்படுத்தியது.

இவ்வாறு தான் இலங்கைத்தமிழ் இசைமரபு பல இசைமரபுகளின் சங்கமமாயிருப்பினும் நாட்டார் மரபுகளையும் மீள் உயிர்ப்பு செய்யத் தவறவில்லை. பாரம்பரிய கலைகள் மேம் பாட்டுக்கழகம், நாட்டார் வழக்காற்றியற் கழகம், தேசிய கலை இலக்கியப்பேரவை போன்ற நிறுவன அமைப்புக்கள் இம்மரபுகளை அழிந்திடாமல் காப்பதில் முயற்சிகள் எடுத்து வருகின் றன. இவற்றின் செயற்பாடுகள் அடிக்கடி இனத்துக்குரிய அடையாளத்தை நினைவு படுத்திக்கொண்டிருக்கிறது.

இந்தவகையில் இலங்கையில் இரு இனத்துவமரபுகள் வளர்ச்சிபெற்று நின்றபோதும் இவற்றின் ஒருமைப்பாடு, தனித்துவம் பற்றி பல ஆய்வுகளும் இந்தக் காலப்போக்கிலே நிகழ்ந் துள்ளமை குறிப்பிடப்படவேண்டியது அவசியம். எவ்வாறு மேலைப் புலங்களிலே தேசிய பண்பாட்டுப் புத்துயிர்ப்புக்களுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவோ அவை போன்ற சில முயற்சிகள் இங்கும் நடைபெற்றுள்ளன. 3500க்கும் அதிகமான நாட்டார் பாடல் மாதிரிகவிடை லோமக்ஸ் (Lomax) மேற்கொண்ட பண்பாட்டு மானிடலியலாய்வுகள் இந்தவகையில் குறிப் பிடப்பட வேண்டியவை. இந்த மாதிரியான நிலையிலே அறுபதுகளின் பின்வந்த காலங் களிலே வானொலி நிலையத்தை மையமாகக்கொண்ட 'ஆக்க சங்கீதத்திற்கான தேடல்' என்ற பொருளில் நடைபெற்ற தொடர்க் கருத்தரங்குகள் பல முன்வைப்புக்களை வைத்தன. தேசிய எழுச்சியிலே எவ்வாறு தமிழ், சிங்கள இசைமரபுகளை பயன்படுத்துவது, எமக்கப் பாலுள்ள ஏனைய பண்பாட்டிசை மரபுகளை எவ்வகையில் பயன்படுத்துவது, வாத்திய மரபுகளின் இணைவு போன்ற பல நிலைகளில் ஆராயப்பட்டன. தேவகுரிய சேனா தலைமையில் கலாநிதி எஸ்.ஞானலிங்கம், பேராசிரியர் ஈ.ஆர்.சரத்சந்திரா, திரு.மக்குலோலுவ இவர்களோடிணைந்து டாக்டர்.எஸ்.கே.மகேஸ்வரன் போன்றோரின் ஆய்வியல் தேடல்களும் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவை.

தமிழில் இவ்வாறான காத்திரமான ஆய்வு முயற்சிகள் ஏதுமில்லாத நிலையிலே ஆங்காங்கே தனி முயற்சிகளான சிலவற்றையே காணமுடிகிறது. ஆயினும் ஈழத் தமிழ் இனம் அவ்வப்போதுகளில் அக்கணப்பண்பாட்டு ஏற்புநிலைகளுக்கேற்ற வகையில் தமது அடையாளங்களை காத்துக்கொள்வதற்கு இசைஅலகைப்பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது.

வேகமாக மாறிக்கொண்டிருக்கும் இக்கால சமூக ஓட்டத்திற்கேற்ப ஒவ்வொரு பண்பாடும் தன்னைத்தக்க வைத்துக்கொள்வது என்பது சவாலாகிப்போயிருக்கின்றது. மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைப்பு அவசியம். ஆனால் எமக்குரிய தனித்துவங்கள், அடையாளங்கள் கால ஓட்டத்திலே அள்ளுண்டு போகவிடுதல் ஆகாது. ஈழத்து தமிழர் இசை மரபினைப்பொறுத்தவரையிலே எத்தனையோ சவால்களுக்கு இடம்கொடுத்து செல்லவேண்டிய ஒரு பண்பாட்டு சமூக நிலையைக் கொண்டிருக்கின்றது. எனவே தமிழர்க்குரிய இசை பற்றிய தேடல்கள் ஆய்வு நிலைகளிலே பெரியளவில் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம். எமக்குரிய பண்பாட்டுவேர்களை இனம்கண்டு காத்துக்கொள்வது மட்டுமன்றி சரியான வகையிலே பண்பாட்டுக்கையளிப்பினை சந்ததிக்கு சந்ததி ஏற்படுத்திக்கொடுத்தல் அவசியம்.

**துணை நூல்கள் :**

1. C.D.S.Kulatillake & Ranjan Abayasinghe, A Background to Sinhala Traditional Music of Srilanka, Department of Cultural Affaires,Srilanka.
2. J.B.Dissanayake, Aspects of Sinhala folk lore, Lake House Tnvestment Ltd Book Publishres.
3. S.K. Maheswaran, The Case for a United System of Classical Music in Srilanka, Seminar paper, The Fourth International Conference of Tamil Studiec, Jaffna.1974
4. Roshmi Goswami,Man and Music in India, Indian Institute of Advanced Study, 1992.
5. Dr. Gowri Kuppuswamy & Dr M. Hariharan,Text Book of Comparative Music.
6. *கலாநிதி. இளையதம்பி பாலசுந்தரம், நாட்டார் இசை இயல்பும் பண்பாடும், நாட்டார் வழக்கியல் கழகம், யாழ்ப்பாணம்,1991.*
7. *ஆர். இராமநாதன், நாட்டுப்புற பாடல்கள், வகைகள், புலமை வெளியீடு,சென்னை.1992.*
8. *கலாநிதி. என் சண்முகலிங்கள், சமூக மாற்றத்தில் பண்பாடு, சவுத் விஷன்,2000.*
9. *ப. தண்டாயுதபாணி, திராவிடர் இசை , ஆபிரகாம் பண்டிதர் மன்றம், 1993.*

# பிரித்தானியர் கால சமூக மாற்றத்தில் கல்வியின் பங்கு

## (பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப காலத்தை மையமாகக் கொண்டது)

முனைவர் திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,

சமூகம் என்பது எப்போதும் தேக்க நிலையில் இருப்பதில்லை. அதன் வளர்ச்சிக்குப் பல்வேறு காரணிகள் துணை செய்கின்றன. சமூகத்தின் மாற்றத்துக்கு பல காரணிகள் செயற்பட்ட போதிலும் முக்கியமாகக் கல்வி ஒரு பிரதான காரணியாகும். சமூக முன்னேற்றத்துடன் இது நெருங்கிய தொடர்பு கொண்டது. மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால் மக்களின் பொருளாதார நிலை ஓரளவு திருப்திகரமாக அமைய வேண்டும். இதனால் கல்வி நடவடிக்கைகள் நன்கு திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். கல்வி சமுதாயத்தில் வேலை வாய்ப்புக்கும் அறிவியல் முன்னேற்றத்துக்கும் உதவுகின்றது.

இவ்வகையில் ஒரு சமூகம் கல்வியின் மூலம் மாற்றமடைந்து வருகின்றது என்னும் போது அம்மாற்றம் மேல் நோக்கிய மாற்றமாக இருக்க வேண்டும். இது சமூகத்தில் ஒரு அசைவை ஏற்படுத்துகின்றது. இந்த அசைவு சமூக மாற்றம் எனப்படும். சமூகத்தின் பல்வேறு தளங்களும் மாற்றமடைகின்றன. பெண்கள் கல்வி, முதியோர் கல்வி, கிராமியக் கல்வி, தொழிற்கல்வி போன்ற பல்வேறு கல்வி நிலையங்களும் வளர்ச்சிபெற வேண்டும். கல்வியின் மூலம் வேலையில்லாப் பிரச்சினை குறைக்கப்பட வேண்டும். இதனால் பொருளாதார நிலை உயர வேண்டும். மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். சமூக அமைப்பில் தாம் எந்த நிலையிலும் எங்கு இருக்கின்றோம் என்பதை அறிய வேண்டும். பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான அறிவு அவர்களிடையே விளக்கம் பெற வேண்டும் என்பவற்றை இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.



# யாழ்ப்பாணத்துச் சைவ மரபில் வைணவமதச் செல்வாக்கு

பேராசிரியர் திருமதி இராமநாமன், M.A, Ph.D
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்து நாகரீகத்துறை
தலைவர்/சமஸ்கிருதத்துறை.

சநாதன தர்மம் எனப்படும் இந்து சமயத்திலே வைணவ நெறியும் ஒன்றாகும். சைவத்தின் தோற்றம் வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டது. வேதங்களாலும் இதிகாச புராணங்களாலும் இக் கடவுளர் வழிபாடுகள் அறியப்பட்டுள்ளன. 'ஏகம்ஸத்' என்னும் உட்பொருள் ஒன்று வேதகாலக் கடவுளர் வளர்ச்சியில் பல தெய்வங்கள் வழிபடப்பட்டபோதும் மத வேறுபாடுகளோ சச்சரவுகளோ அங்கு தோன்றியமைக்கு சான்றுகளில்லை. சிந்து வெளியில் தொல்பொருட் சின்னங்களை ஆராய்ந்த மாரிவேலும் அங்கு கூட்டுவழிபாடு காணப்பட்டதாகவே குறிப்பிட்டுள்ளார்.

எனவே தம்முள் பெருமளவு வேறுபாடுகள் இருந்த போதும் எல்லா உட்பிரிவுகளையும் இந்து மதமாகக் குறிக்கும் மரபு இந்தியாவிலும் அதனைச் சைவ சமயமாகக் குறிப்பிடும் மரபு ஈழத்து - யாழ்ப்பாணத்திலும் பெரிதும் வேரூன்றியிருக்கின்றது. காணபத்யம், கௌமாரம், வைணவம், சௌரம், சாக்தம் யாவற்றையும் தனக்குள்ளடக்கி பரந்து விரிந்து விளங்குவது சைவசமயமாகும். இன்று யாழ்ப்பாணத்திலே விஷ்ணு, சூரியம், சக்தி, சனுபதி, முருக வழிபாடுகள் யாவும் தனிச் சிறப்பு வாய்ந்தனவாகக் காணப்படுவதும் அவை யாவும் சைவ சமய வழிபாடாகவே கைக் கொள்ளப்படுகின்றதேயன்றி தனித்தனி சமய நெறிகளாக இங்கு வழக்கிலில்லை. ஆதலால் இந்து என்றால் சைவம் - சைவம் என்றால் இந்து என உணரும் நிலையும் உண்டானது. சைவத்தின் மூலங்களாக வேதமும் ஆகமங்களும் அமைந்திருப்பதனால் அது 'வைதிக சைவம்' எனவும் ஈழத்தமிழ் அறிஞர்களினால் சிறப்பிக்கப்படும்.



ஈழமானது சிவ பூமி எனத் திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட புண்ணிய பூமி. இங்கு இராவணனால் சிவன் பூசிக்கப்பட்டு வழிபடப்பட்ட தலம் திருக்கோணேஸ்வரமாகும். எனவே இதிகாசங்களில் ஒன்றான இராமாயணச் செல்வாக்கு ஈழ நாட்டிலே தொன்று தொட்டு நிலவி வரும் ஒன்றெனலாம். இராமாயண காலம் முதல் சிவ பூமியான ஈழம்- யாழ்ப்பாணத்தில் சைவ சம்பிரதாயமே தனித்துவம் வாய்ந்த மாட்சிமை பொருந்திய ஒன்றாக விளங்கி வருகின்றது என ஆராய்கிறது இக் கட்டுரை.

# வரலாற்று நோக்கில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

**சசிதா குமாரதேவன்**
**விரிவுரையாளர், வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

யாழ்ப்பாண அரசு தொடர்பாக தோன்றிய தமிழ் இலக்கியங்கள் சோழர் வருகையுடன் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசின் தலைநகர் சிங்கை நகருக்கு இடம்மாறியதை சூசகமாக தெரிவிக்கின்றன. இவ் இலக்கியங்கள் தமிழகத்தில் சோழர் ஆட்சி மறைந்து ஏறத்தாழ 700 ஆண்டுகளின் பின்னர் தோன்றியிருந்தாலும் தமிழ் இராசதானி தோன்றிய வரலாற்றோடு சோழரின் வருகையை முன்னிலைப்படுத்தியிருப்பது இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் அவர்களின் வகிபாகத்தை புறக்கணித்துவிட முடியாதென்பதைக் காட்டுகின்றது. முதலியார் இராசநாயகம் கதிரமலையை வலிமேற்கில் உள்ள கந்தரோடை என அடையாளப்படுத்தி அதுவே நாகநாட்டில் தோன்றிய முதலாவது தமிழ் அரசு எனவும் அவ்வரசின் தலைநகர் சிங்கை நகருக்கு இடம்மாறியதற்கு சோழர் வருகையே காரணம் எனவும் குறிப்பிடுகின்றார். இவரின் கருத்தை ஆமோதிக்கும் சுவாமி ஞானப்பிரகாசர் இவ்வரசின் தோற்ற காலத்தை கி.பி. 8ஆம் நூற்றாண்டு என குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ இதே காலப்பகுதியில் கதிர மலையிலிருந்து ஆட்சி புரிந்த உக்கிரசிங்க மன்னன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை தோற்றுவித்த சோழ இளவரசியான மாருதப்புரவல்லியை பட்டத்தரசியாக்கி அக்கோயிலின் வளர்ச்சிக்கு பல பணிகளை செய்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலையில் இடம்பெறும் பல வரலாற்றுச் சம்பவங்கள் பாளி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஐதீகங்களின் மாற்று வடிவமாக உள்ளன. இருப்பினும் யாழ்ப்பாணத்தின் தொன்மை பற்றி இவ்விரு நூல்களிலும் கூறப்படும் வரலாற்றுச் செய்திகளில் சில உண்மைகளும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. இதற்கு வலிகாமத்தின் மேற்கு பகுதியில் கிடைத்து வரும் தொல்லியல் சான்றுகள் முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன. 1917 இல் கந்தரோடையிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்ட போல் பீரீஸ் அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரமாகக் கந்தரோடையைக் குறிப்பிடுவது இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதன் காரணமாகத்தான் பாளி நூல்களில் இலங்கையின் தனித்துவம் வாய்ந்த பிரதேசமாக யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தி கூறுகின்றன என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும். இது பாளி இலக்கியங்களில் நாகதீபம் எனவும், வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனத்தில் நாகதீவ எனவும், தமிழகத்தில் எழுந்த இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் நாகநாடு எனவும் குறிப்பிடப்படுகின்றது. இங்கு அநுராதபுரத்திற்கு சமமான காலத்தில் இருந்து சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததை ஆனைக் கோட்டை, கந்தரோடையில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் சுட்டிக் காட்டுகின்றன. இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் பாளி இலக்கியங்கள் இங்கு ஆட்சியில் இருந்த நாக அரசு பற்றிக் கூறுகின்றன. கி.பி 1ஆம் நூற்றாண்டுக்குரிய சாசனம் ஒன்று இங்கு ஆட்சி புரிந்த நாக மன்னன் தீபராஜா என்ற விருதுப் பெயருடன் ஆட்சி புரிந்ததாக கூறுகின்றது.



இவ்வாறு தனியொரு பிராந்தியமாக சிற்றரசின் ஆட்சிக்குட்பட்ட யாழ்ப்பாணத்தில் கி.பி 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஆகம மரபிற்கு உட்படாத வழிபாட்டு மரபுகளும் தமிழ்ப் பௌத்தமும் நிலவியதாக தெரிகின்றது. ஆயினும் கி.பி 6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கமும் பல்லவ அரசின் எழுச்சியும் யாழ்ப்பாணத்தில் அதிலும் சிறப்பாக வட இலங்கையில் பல்லவர் கால அரசியல், சமய ஆதிக்கம் நிலவக் காரணமாகியது. அக்காலத்தில் இருந்தே ஆகம மரபில் கற்களைக் கொண்டு இந்து ஆலயங்கள் அமைக்கும் மரபு இலங்கையில் தோற்றம் பெற்றது. இதைத் தமிழகத்திற்கு அடுத்த நிலையில் இலங்கையில் இருந்த திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீஸ்வரமும் நாயன்மார்களால் போற்றிப்பாடக் காரணமாகியது. இக்காலத்தில் இருந்து வட இலங்கை

தமிழகப் படையெடுப்பாளருக்கும் தென்னிலங்கையில் அரசுரிமையை இழந்த சிங்கள மன்னர்களிற்கும் பாதுகாப்பு வழங்கும் இடமாக மாறியது. கி.பி 7ஆம் நூற்றாண்டில் அரசுரிமையை இழந்த ‘மாணா’ என்ற சிங்கள மன்னன் அநுராதபுர மன்னனுக்கு பயந்து நாகதீபத்தில் அடைக்கலம் பெற்றான் என சூளவம்சம் கூறுகின்றது. இதே காலப்பகுதியில் பல்லவ மன்னன் நாக நாட்டு இளவரசியை மணந்தான் என பல்லவச் செப்பேடு கூறுகிறது. கி.பி 8ஆம் நூற்றாண்டில் அநுராதபுர அரசிற்கு எதிராக நாகதீபத்தில் இருந்து ஸ்ரீநாக என்ற தலைவன் படையெடுத்த செய்தி கூறப்படுகின்றது. கி.பி 835 இல் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் வடஇலங்கையில் வந்திறங்கிய போது இங்கிருந்த தமிழர்கள் அவனுடன் இணைந்து அநுராதபுர அரசை வெற்றி கொண்டதாக சூளவம்சம் கூறுகின்றது. இச்சம்பவங்கள் எல்லாம் நாகதீபம் அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் உட்படாது தனியொரு ஆதிக்கம் நிறைந்த பிராந்தியமாக திகழ்ந்ததைக் காட்டுகின்றது.

இவ்வாறான காலப்பகுதியில் தான் சோழ மன்னன் முதலாம் பராந்தக சோழன் கி.பி 10ஆம் நூற்றாண்டளவில் வட இலங்கை மீது படையெடுத்தான். இப்படையெடுப்பு நாகதீபத்தில் நடந்ததாக கூறும் சூளவம்சம் இப்படையெடுப்பால் அநுராதபுர அரசிற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறுகின்றது. அதேவேளை இப்படையெடுப்பை பெரும் வெற்றியாக சோழச் சாசனங்கள் கூறுகின்றன. இதற்காக முதலாம் பராந்தக சோழன் ‘ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்’ என்ற விருதுப் பெயரைப் பெற்றதாக அவன் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வரலாற்று அறிஞர்கள் சோழரது ஆதிக்கம் அநுராதபுரத்தில் ஏற்பட முன்னர் நாகதீபத்தில் ஏற்பட்டதையே கூறுகின்றன. இதற்கு சோழர் ஆட்சி தொடர்பான கோயில்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், அதிகளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்டுபிடிக்கப்பட்டதை ஆதாரமாகக் காட்டுகின்றனர். இங்கே கதிரமலை அரசின் வீழ்ச்சியை சோழர் வருகையுடன் தொடர்புபடுத்தும் தமிழ் இலக்கியங்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் தோற்றத்தை சோழவம்சத்து அரசி மாருதப்புரவல்லியுடன் தொடர்புபடுத்துவதை நோக்கலாம். சோழர் ஆட்சியில் மாவிட்டபுரம் அமைந்த வலிகாமம் அவர்களின் அரசியல், பண்பாட்டு செல்வாக்கிற்கு உட்பட்டதாகவும், இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் தமிழக யாழ்ப்பாண (நாகதீபம்) உறவில் இப்பிராந்தியத்தில் உள்ள ஜம்புகோளத் துறைமுகம் பெற்ற வரலாற்றுச் சிறப்பை குறிப்பிடுகின்றது. இத் துறைமுகம் அமைந்த இடத்தைச் சிலர் தற்காலத் திருவடிநிலை எனவும், வேறு சிலர் காங்கேசன்துறை எனவும் குறிப்பிடுகின்றனர். ஆயினும் இவ்விரு இடங்களின் அமைவிடம் கடல் வழித் தொடர்பிற்கு சாதகமாக தமிழகத்திற்கு அண்மையில் அமைந்திருந்தமை தமிழக பண்பாடு முதலில் இங்கு பரவுவதற்குச் சாதகமாக அமைந்தது. சோழ சாசனம் ஒன்று வட இலங்கையில் வலிகாமத்தை வெற்றி கொண்டு அங்கிருந்து பெருமளவு யானைகளை தமிழகம் கொண்டு சென்றதாகக் கூறுகின்றது. மாவிட்டபுரம் அமைந்த சுற்றாடலில் காணப்படும் வளவர்கோன் பள்ளம் காங்கேசன்துறை சோழக் கல்வெட்டுக்களில் அதிலும் குறிப்பாக பராந்தக சோழன் காலக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்படும் பெயராகும். இவற்றை நோக்கும் போது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் தோற்றத்தை சோழருடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தெரிகின்றது.



ஆயினும் கி.பி16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் யாழ்ப்பாணத்தில் 500ற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் ஒன்றாக இருக்கலாம். தற்போது நாம் காணும் கந்தசுவாமி கோயில் 1782 இல் குமாரசாமிக் குருக்களால் கட்டப்பட்டதாக வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இது ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்திரம் அழிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வாலயமும் மீளக் கட்டப்பட்டதைக் காட்டுகின்றது. ஆயினும் இதற்கு தொன்மையான வரலாறு இருக்கலாம் என்பதை நாகதீபம் பற்றிய வரலாற்றுச் சம்பவங்கள் தெரிவிக்கின்றன.



# தமிழர்தம் வாழ்வியலைக் காட்டும் ஒரு பொருட்காட்சி

வணக்கம் கலைக்கேசரி வாகசர்களே!

2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு கோயம்புத்தூரில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி விசேட மலர் ஒன்றைத் தந்து, அனைவரதும் வரவேற்பைப் பெற்ற கலைக்கேசரி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை, கலைக்கேசரியின் பூரண ஆதரவுடன் 2011 செப்டம்பர் மாதம் 24 முதல் 27 ஆம் திகதி வரை நடத்தும் யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சியை முன்னிட்டு, இவ்விசேட மலரினை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறது.

ஓர் இனத்தின் பெருமை அதன் சமகாலச் சிறப்புகளில் மட்டுமன்றி அதன் தொன்மையிலும் தங்கிநிற்கிறது என்பது உண்மை. உலகத் தொல்சீர் மொழிகளில் ஒன்றான தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழினம் தொன்மை மிக்கது என்றால் மிகையில்லை.

அத்தகைய பழைமைச் சிறப்புக்கொண்ட யாழ்ப்பாணத்து வாழ்வியலில், காலத்தோடு மறைந்துபோனதும், மற்றும் மறைந்து கொண்டிருப்பதுமான மரபுச் சிறப்புகளை இன்றைய சந்ததியினருக்கு தகுந்த முறையில் எடுத்துக்காட்டி, உய்த்துணர வைக்கும் நோக்கில் இப்பொருட்காட்சி இடம் பெறுவது காலத்தின் தேவையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் இதுகாலவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் மூலம், நாற்பதுக்கும் மேற்பட்ட புராதன குடியிருப்புகள் இருந்ததென்பதும், 2500 ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாண மண்ணில் மக்கள் வாழத் தொடங்கினார்கள் எனவும், அவர்கள் தென் இந்தியாவின், தென் பகுதி மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் எனவும் நிரூபணமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்திருந்த அவர்கள் வெளிநாடுகளுடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சான்றாக, அகழ்வாய்வுகளில் கிடைத்த பல்வேறு வெளிநாட்டு நாணயங்கள், கண்ணாடிப் பொருட்கள், கல்மணிகள், மட்பாண்டங்கள் ஆகியன கிடைத்துள்ளன எனவும் ஆய்வறிஞர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் தமிழ்மொழி, கலை, கலாசார மற்றும் சமய வளர்ச்சிக்கும் யாழ்ப்பாணத்து வாழ்வியல் பெரிதும் பங்களிப்புச் செய்கிறது என்பதும் நாம் அறிந்ததே. பழைமையின் அடிப்படையில் சமகாலத்தை நோக்குவது புத்துணர்வைத் தரலாம்.

கடந்த முப்பது ஆண்டுகாலமாக, கைவிடப்பட்டிருந்த தொல்லியல் ஆய்வுகள் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப்படும் இன்றைய சூழ்நிலையில், இப்பொருட்காட்சி இடம்பெறுவதும் பொருத்தமானதே. பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகளுடன் ஆய்வரங்குகளில் அறிஞர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ள சில ஆய்வுக் கட்டுரைகளில் உள்ளடங்கி இருக்கும் சாரம்சக் குறிப்புகளும் மற்றும் ஆய்வறிஞர்களின் சில கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெறுகின்றன. அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

இப்பொருட்காட்சி சிறப்புற நடைபெற, தமிழ் நெஞ்சங்களின் நல்லாதரவு பெரிதும் வேண்டப்படுகிறது.

நன்றி.
அன்புடன்,
**திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை**
ஆசிரியர்
கலைக்கேசரி



**அட்டைப்படம் :**
நல்லூர் ராஜதானியை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியனின் உருவச்சிலை

## யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி ஆரம்ப விழா நிகழ்ச்சி நிரல்

**காலம் - 24.09.2011 சனிக்கிழமை　　நேரம் - காலை 9.00 மணி**

**இடம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கு**

பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறும் விஷேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, விருந்தினர்களைக் கைலாசபதி அரங்கிற்கு மங்கள வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லல்.

| | |
|---|---|
| **காலை - 9.15 மணி** | **தேசிய கீதம்**<br>யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவர்கள் |
| **காலை - 9.20 மணி** | **தமிழ்த் தாய் வாழ்த்து**<br>யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவர்கள் |
| **காலை 9.25 மணி** | **வீரகேசரி செந்தமிழ் பாடல்** |
| **காலை 9.30 மணி** | **மங்கள விளக்கேற்றல்**<br>**பிரதம விருந்தினர் : சேனரத் திசநாயக்க,**<br>பணிப்பாளர் நாயகம், இலங்கை தொல்லியல் திணைக்களம்.<br>**கௌரவ விருந்தினர்கள் :**<br>**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,**<br>துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.<br>**திரு. எம். கந்தசாமி,**<br>பொது முகாமையாளர், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்.<br>**பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்,**<br>தலைவர், யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி<br>**பேராசிரியர் என்.ஞானகுமாரன்**<br>தலைவர், கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியர் சி.பத்மநாதன்,**<br>வாழ்நாள் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்.<br>**திரு. எஸ். சூரியதாசன்**<br>4 ஆம் வருட வரலாற்றுத்துறை மாணவன்,யாழ். பல்கலைக்கழகம் |
| **காலை 9.40 மணி** | **வரவேற்புரை : செல்வி. சசிதா குமாரதேவன்,**<br>விரிவுரையாளர், வரலாற்றுத்துறை. |
| **காலை 9.50 மணி** | **தலைமையுரை : பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்,**<br>தலைவர், யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி |
| **காலை 10.00 மணி** | **கௌரவ விருந்தினர் உரை : திரு. எம். கந்தசாமி,**<br>பொது முகாமையாளர், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட். |
| **காலை 10.10 மணி** | **கௌரவ விருந்தினர் உரை : பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,**<br>துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம். |
| **காலை 10.20 மணி** | **பிரதம விருந்தினர் உரை : சேனரத் திசநாயக்க,**<br>பணிப்பாளர் நாயகம், இலங்கை தொல்லியல் திணைக்களம். |
| **காலை 10.30 மணி** | **நன்றியுரை : திரு. பஸ்ரியாம்பிள்ளை ஜோண்சன்,**<br>உதவி ஆசிரியர், கலைக்கேசரி.<br>**கலாநிதி க.அருந்தவராஜா**<br>யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சிச் செயலாளர் . |
| **காலை 10.40 மணி** | **யாழ்ப்பாண வாழ்வியல் ஆவணப் படம்**<br>தயாரிப்பு யாழ்ப்பாண ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் |
| **காலை 11.00 மணி** | **பிரதம விருந்தினர் பொருட்காட்சி நாடாவை வெட்டி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தல்.** |

**குறிப்பு - விருந்தினர்களுக்கான சிற்றுண்டி 3 ஆவது மாடியில் உள்ள கருத்தரங்கு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

# யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி நிறைவு விழா நிகழ்ச்சி நிரல்

காலம் - 27.09.2011 செவ்வாய்க்கிழமை நேரம் - பிற்பகல் 2.00 மணி

இடம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கு

| | |
|---|---|
| பிற்பகல் 2.00 மணி | **தேசிய கீதம்**<br>யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவர்கள் |
| பிற்பகல் 2.05 மணி | **தமிழ்த் தாய் வாழ்த்து**<br>யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவர்கள் |
| பிற்பகல் 2.10 மணி | **வீரகேசரி செந்தமிழ் பாடல்** |
| பிற்பகல் 2.15 மணி | **மங்கள விளக்கேற்றல்**<br>**பிரதம விருந்தினர்கள் :**<br>**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**<br>துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.<br>**திரு. எம். கந்தசாமி,**<br>பொது முகாமையாளர், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்.<br>**ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்த அறிஞர்கள்.**<br>**திருமதி அன்னலட்சுமி இராஜதுரை**<br>ஆசிரியர், கலைக்கேசரி. |
| பிற்பகல் 2.25 மணி | **வரவேற்புரை : செல்வி. சசிதா குமாரதேவன்**<br>விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம். |
| பிற்பகல் 2.35 மணி | **தலைமையுரை : பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்,**<br>தலைவர், யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி |
| பிற்பகல் 2.45 மணி | **சான்றிதழ் வழங்கல் :**<br>**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**<br>துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.<br>**திரு. எம். கந்தசாமி**<br>பொது முகாமையாளர், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்.<br>**பேராசிரியர் என்.ஞானகுமாரன்**<br>பீடாதிபதி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியர் எஸ். சத்தியசீலன்**<br>தலைவர், பட்டமேற்படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியர் கே.கந்தசாமி,**<br>பீடாதிபதி , விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியர் எம்.வேல்நம்பி**<br>பீடாதிபதி,முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியர் கே.சிவபாலன்**<br>பீடாதிபதி , மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்.<br>**கலாநிதி எஸ்.சிவச்சந்திரன்**<br>பீடாதிபதி , விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.<br>**திரு. தியாகராஜா தயாளன்**<br>தகவல் தொழிநுட்ப முகாமையாளர்,<br>எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட். |
| பிற்பகல் 3.00 மணி | **நினைவுப் பரிசில் வழங்கல் : பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,**<br>துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம். |
| பிற்பகல் 3.15 மணி | **நன்றியுரை : திருமதி அன்னலட்சுமி இராஜதுரை,**<br>ஆசிரியர், கலைக்கேசரி.<br>**சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி. எஸ்.அருளானந்தம்,,**<br>யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சிச் செயலாளர். |




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.